ஓம்

கைதடி சைவ ஐக்கிய சங்கம்

கைதடி

# பொன்விழா மலர்

1972

உ

சிவமயம்

கைதடி சைவ ஐக்கிய சங்க

# பொன்விழா மலர்

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

26-8-72

உ
சிவமயம்

அருவாய் உருவாய் அறிவாய்,
நீக்கமற நிறைந்து நின்று, அம்பலத்தே அருள் நடம் பயின்று,
சிந்திப்பவர், காண்பவர் சிந்தை நிறைந்து இனிக்கும் இன்னமுதாம் செம்மேனி
எம்மான் திருப்பாதங்கட்டு
இம்மலர் சமர்ப்பணம்.



குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே.

— அப்பர் சுவாமிகள்

(இதன் தொடர்பான கட்டுரை ‘கோயிலும் கூத்தனும்’ 17ஆம் பக்கம் பார்க்க)

சிவமயம்

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| சமர்ப்பணம் | | | |
| ஆசியுரைகள் | ... | ... | i |
| வாழ்த்துரைகள் | ... | ... | ii |
| வாழ்த்துப்பா | ... | ... | vii |
| சங்க உத்தியோகத்தர்களும் நிர்வாகசபை உறுப்பினர்களும் (50 வது ஆண்டு) | | | viii |
| சங்க வரலாறு | — | அ. சின்னையா | 1 |
| சங்கமும் அதன் உப அம்சங்களும் | — | சு. கனகசபாபதி | 5 |
| சிவத்தியானம் | — | அ. செல்லத்துரை | 7 |
| சைவ மக்களுக்கொரு கற்பகக்கனி | — | சு. தியாகராசா | 10 |
| திருவடி வழிபாடு | — | மு. சபாரத்தினம் | 14 |
| கோயிலுங் கூத்தனும் | — | வே. ஆறுமுகம் | 17 |
| திருமுறைச் செல்வம் | — | க. கணபதிப்பிள்ளை | 20 |
| சமயமும் வாழ்க்கையும் | — | க. சின்னையா | 21 |
| தருமம் | — | ச. பொன்னுத்துரை | 26 |
| இலக்கிய இன்பம் | — | திருமதி சிவநாராயணமூர்த்தி | 28 |
| தியாகத்தின் பேரொளி | — | செல்வி புஷ்பா செல்வநாயகம் | 33 |
| மனம் கோயிலாக | — | சு. வேலுப்பிள்ளை | 36 |
| என் கடன் பணிசெய்து கிடப்பதே | — | க. சி. சுந்தரம் | 38 |
| தலைவர்கள், காரியதரிசிகள் பட்டியல் | | | 39 |
| நன்றி மறப்பது நன்றன்று | | | 39 |
| கைதடி சைவ ஐக்கிய சங்கம் கொழும்புக் கிளை | | | 40 |

சிவமயம்

# ஆசியுரைகள்

**ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரான் ஸ்வாமிகள்**

## நல்லை ஞானசம்பந்தர் ஆதீனகர்த்தர்

கைதடி சைவ ஐக்கிய சங்கத்தின் ஐம்பதாவது ஆண்டு பூர்த்தியடையும் பொன் விழா நன்னாளில் சங்கத்தார் மலர் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சி. சைவம் பரந்த நோக்குடையது. கைதடி ஐக்கிய சங்கத்தின் சேவைகள் போற்றுதற்குரியது. ஆஸ்திகத்திற்கும் ஆபத்து வருமோ என அஞ்சும் வேளையில் இப்படியான சங்கத்தின் சேவைகள் அத்தியாவசியமானவை. பொன் விழா மலர், சிவ மணமும் தமிழ் மணமும் கமழ வெளிவருதற்கு, எல்லாம் வல்ல இறைவனை வழுத்தி ஆசீர்வதிக்கின்றோம்;

---

## உருத்திரபுரம், மகாதேவ ஆச்சிரமம்

**ஸ்ரீலஸ்ரீ வடிவேல்சுவாமி அவர்கள்**

உலகிலே உள்ள எல்லா மதங்களுக்கும் தாயகமாக விளங்குகின்ற நம் வைதீக சைவ மதம் எல்லா விதமான செயல்களிலும் கலந்து எல்லா மக்களுக்கும் இன்ப ஊற்றாய் விளங்கின்றது. எனவே, நல்நோக்கத்துடன் 1921ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இச்சங்கம் தொடர்ந்து சிறந்த சமய சேவையையும் சமூக சேவையையும் செய்து வருகின்றது. இது மக்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்குகின்றது. இது இப்பொழுது சமயத்திற்கும் மற்றைய இன்று வாலிபர்களுக்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளது. இச்சங்கம் பொன் விழாவை நடத்துவதைக் கேட்டு மிக மகிழ்ச்சி அடைகின்றேன். இது பல்லூழி காலம் தழைத்தோங்க எல்லாம் வல்ல சிவபெருமானை வாழ்த்துகின்றேன்.

சைவஐக்கிய சங்கம் வாழி அதில் சார்ந்தோர் அனைவரும் வாழி
செய்கை அனைத்திலும் செம்மை பிறந்து செழிப்புடன் வாழ்ந்திடவே
வையம் அனைத்தும் வளம்பெற வாழ்ந்திடவே
ஐயன் அடிக்கமலத் தொண்டர் என்றென்றும் வாழிய வாழியவே.

சுபம்.

---

சிவமயம்

# வாழ்த்துரை

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

'மனத்தை வயப்படுத்துதல் சித்தியாகுக'

என்று, திருவருளைப் பிரார்த்திக்கும் முறையிற் கைதடி சைவ ஐக்கிய சங்கத்துக்கு என் வாழ்த்துரையை மிக்க பணிவுடன் தெரிவித்துக் கொள்ளு கின்றேன்.

சைவ ஐக்கிய சங்கம் பழைமையானது; முதிர்ந்த பெரியோர்களால் தாபிக்கப்பட்டது; மகான்களின் ஆசிக்குப் பாத்திரமாய் நல்ல சாதகச் சூழலில் அமைந்திருக்கின்றது. ஐம்பதாம் ஆண்டு விழா அதன் தூய அறிவுத் தெளி வுக்கு ஓர் அறிகுறி.

'சைவம்,' சிவத்தோடு சம்பந்தப்பட்டது என்னும் பொருளுடையது. ஆன்மா சிவத்தோடு ஐக்கியப்பட்டுச் சிவமயம் ஆவதே அடையற்பாலது.

புற அக இந்திரியங்களோடு கூடிய இந்தச் சரீரம் திருவருளால் நமக்குக் கிடைத்தது. இந்திரியங்களுள் மிகமிக முக்கியமானது மனம். அது புற இந்திரி யங்கள் மூலம் விஷயங்களை முகந்து, புத்தியின்மூலம் ஆன்ம அறிவுக்கு அவ் விஷயங்களை அனுப்பிவைப்பது. ஆன்மா, மனத்தைத் தனக்கு ஒரு வாய்ப்பான கருவி என்று நம்பி, அதனைப் பயன்படுத்துவதொரு கருத்தா, தான் என்று எண்ணிக் கொண்டிருக்கும். மனமோ, முன் செய்துவைத்த வினைகளுக்குத் தக ஆன்மாவின் அறிவை இழுத்துத் தன்வழியில் நடத்திக் கொண்டிருக்கும். 'விதியே மதியாய் விடும்' என்பது ஔவை வாக்கு. புத்தியும் மனத்தின்வழி நிற்கும்.

தூய ஆன்ம அறிவுக்குக்கூடத் தன்னை மனம் இழுத்துச் செல்லுவதை எட்டுதல் எளிதன்று.

பார்த்தசாரதியாகிய கண்ணன்,

'மாயையென் றொருத்தி தன்பால் மனமெனும் மைந்தன் தோன்றித்
தூயநல் லறிவன் றன்னைத் தோற்றமின் றாக்கி வைத்தான்'

என்று கீதோபதேசஞ் செய்கின்றான். அருச்சுனா, உன் நல்லறிவைத் தலைதூக்க விடாமல் உன் மனம் தடைசெய்து நிற்கின்றதென்பது உபதேசத்தின் கருத்து.

'கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்'

என்று தொடங்கும் பாடலில், எண்ணிறந்த சித்திகளை எய்தல் எளிது.

'சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது'

என்கின்றார் மகாசாதகரான தாயுமானவர்.

மனத்தை,

> *"சென்ற இடத்தால் செலவிடா(து) தீதொரீஇ*
> *நன்றின்பா லுய்ப்ப தறிவு."*

என்று, அறிவை மனத்தின் வயமாகாதிருக்கும்படி — அஃதாவது மனத்தை அறிவு தன்வயமாக்கிக்கொள்ளும்படி — எச்சரிக்கை செய்கின்றார் வள்ளுவதேவர். இன்னும் எத்தனையோ மகான்களின் எச்சரிக்கைகள் உண்டு. இருந்தும், வண்டி, குதிரையை இழுத்துச் செல்வதுபோல, '**ஆன்ம அறிவைக் கொள்ளைகொண்டு மனம் கோளாறு செய்கின்றதே**' என்ற கூக்குரல் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றது.

ஆன்ம அறிவுக்கு ஆன்மாவின் கருவியாகிய மனம் ஏன் கட்டுப்படுகின்றிலது? இது பெரிதும் விசாரிக்கத்தக்கது. மனத்தை நல்வழிப்படுத்த வழியுண்டா? என்பது பெரிய கேள்வி. '**வழியுண்டு; அவ்வழி இது**' என்கின்றது சிவஞான சித்தியார்.

மனத்துக்குக் கருத்தா ஆன்மா அன்று. அதனால், அது ஆன்ம அறிவுக்குக் கட்டுப்படுகின்றிலது. மனத்துக்குக் கருத்தா பரமான்மா. ஆன்மா செய்த வினைகளை ஊட்டுதற்குப் பரமான்மாவினால் நிறுத்தப்பட்டது மனம். ஆகையினால், மனம் பரமான்மாவின் வழியில் நிற்பதன்றி, நம் வழியில் நில்லாது.

பரமான்மாவைப் பத்தி செய்து தவவிரதங்களால் வேண்டுதல் செய்யும் முறையில் வேண்டுதல் செய்து திருவருள் வழி நிற்பின் மனம் ஆன்மாவின் வயமாகுமென்பதே சித்தம்; அப்பொழுது, 'பாவியாம் புத்தி முத்திப் பயன் கொளும் பண்பிற்று' ஆகும்.

> *"இந்திரிய மெனைப்பற்றி நின்றேயென் வசத்தில்*
> *இசையாதே தன்வசத்தே யெனையீர்ப்ப திவற்றைத்*
> *தந்தவன்ற னாணைவழி நின்றிடா லென்றுந்*
> *தானறிந்திட் டிவற்றினொடுந் தனையுடையான் றாள்கள்*
> *வந்தனைசெய் திவற்றின்வலி யருளினால் வாட்டி*
> *வாட்டமின்றி யிருந்திடவும் வருஞ்செயல்க ளுண்டேல்*
> *முந்தனுடைச் செயலென்று முடித்தொழுக வினைகள்*
> *மூளாவங் காளாகி மீளா னன்றே"*

என்ற சித்தியார்ப் பாட்டுப் பெரிதுஞ் சிந்தனைக்குரியது. "இந்திரியம்" என்றது புற இந்திரியங்களையும் மனம் முதலிய அக இந்திரியங்களையுமாம். மனம் முக்கியம்.

சம்பந்தபிள்ளையார் கோள்கள் நாள்களை மன்றுடவில்லை. அவற்றை நிறுவிய இறைவனின் வழி நின்றார் பிள்ளையார். பிள்ளையார் வழிநின்றன கோள்கள் நாள்கள். மனமும் அவைபோன்ற தொன்றே. நாம் இறைவழி நின்று மனத்தை நம்வயம் செய்து சிவசம்பந்திகளாய்ச் சைவ ஐக்கியம் உறுவோமாக.

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் செயலாளர்
## அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத் தலைவர்

**திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்கள் O. B. E.**

பழம்பெருமையும், சைவப் பண்புகளும் பொலிந்து விளங்கும் கைதடியிலே ஐம்பதாண்டுகளுக்கு முன்பு சான்றோரால் தாபிதமாகி இன்றுவரை பல சைவப் பணிகளை ஆற்றிவரும் கைதடி சைவ ஐக்கிய சங்கம் இறைவனருளால், மேலும் மேலும் பல விழாக்களை எடுத்துச் சிறந்தோங்கல் வேண்டும் என வாழ்த்துவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்று சமய உணர்வும், சடங்காசாரங்களும் ஒறுப்பாகி வருகின்றன. இந்நிலையை மாற்றியமைக்க இச் சங்கம் அயராது உழைப்பது வரவேற்கத்தக்கது.

---

**வடபகுதி உதவி அரசாங்க அதிபர்**

## திருக்கேதீஸ்வர திருப்பணிச்சபையாழ்ப்பாணக்கிளைத் தலைவர்

**திரு. முருகேசம்பிள்ளை அவர்கள்**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

வேகமாக மாறியும், அறிவியல் விரிவால் அகண்டும், குறுகியும் வரும் உலகில் அருளியலின் வருங்காலம் என்ன என்று ஆராயப்படுவதில் தவறு யாதும் இல்லை. இவ்விதமான ஆராய்வுக்கு நின்று தாக்குக் கொடுக்கக்கூடியவை எதுவோ அஃதே வாழும் வளரும்.

எம் சமயநெறி எல்லை இல்லாத காலம் மக்களை வாழ்வித்த நெறி. ஆய்வுகளுக்கும் கேள்விகளுக்கும் அசையாத பகுத்தறிவாளரும் ஒப்பும் குறிக்கோள் காட்டும் நெறி. இது சைவத்தின் மாண்பு. இதற்குக் காரணம் காலப்போக்கில் வேண்டிய மாற்றங்களை — அடிப்படையில் ஆட்டம் காணுமல் — ஏற்றமையே எனலாம்.

கடந்த 50 ஆண்டுகளாக அரிய சமய சேவை செய்துவரும் கைதடி சைவ ஐக்கிய சங்கம் தொடர்ந்து தொழிற்பட வேண்டும், வேகமாகத் தொழிற்பட வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். இளையோர்கள் ஆர அமரச் சிந்தித்தும், பெரியோர் வழிகாட்ட, நமது சைவப் பெருநெறி பெருகி வாழ ஆக்கபூர்வமான தொண்டுகள் பல செய்து உள்ளத்தையும் உடலையும் சிவமாக வளர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இச் சங்கம் பல்லாண்டு வாழ்ந்து சேவை புரிய அருள்க என்று அம்மையப்பன் தாள் வேண்டுகிறேன்.

---

**திரு. க. சச்சிதானந்தன் அவர்கள்** M. Sc.
அகில இலங்கை இந்து இளைஞர் சங்கப் பேரவைத் தலைமைச் செயலாளர்

# "நன்னெறி ஒழுகச்செய்து"

உயர்ந்த இலக்குகளை எடுத்துக் கூறினால் மட்டும் போதாது. அந்த இலக்குகளை நோக்கி வாழ்க்கை முயலப்படல் வேண்டும். அறிந்த இலக்குக்கும் நாளாந்த நடைமுறை வாழ்க்கைக்கும் உள்ள இடைவெளி பெரிதாக இருப்பதால், இளைஞர்கள் கொள்வதையும் விடுவதையும் தெரியாது தத்தளிக்கிறார்கள். இந்நிலை இக்காலத்துக்கு மட்டுமுரியதன்று; இந்து இளைஞர்கட்கு மட்டும் உரியதன்று.

காலங்கள் தோறும் இந்த இளைஞர்கள் இந்நிலைக்கூடாக எவ்வாறு கடந்து வந்துள்ளார்களோ அம்முறைகளை இன்றும் புதிய வழிகளிற் பயன்படுத்தி வருகின்றார்கள். சொல்லுக்கும் செயலுக்கும், இலக்குகட்கும் நடைமுறைக்கும் உள்ள வேறுபாடுகள் காலந்தோறும் எடுத்து நோக்கப்பட்டு வந்துள்ளன. மனித பண்பாட்டு வளர்ச்சியினால் இவ்வேறுபாடுகளின் அளவு குறைந்துள்ளது. எனினும், இவ் வேறுபாட்டின் அடிப்படையில் எழுந்த உள்ளத் தத்தளிப்பின் அளவு குறையவில்லை.

உள்ளத்தத்தளிப்பின் அளவைக் குறைப்பதற்குச் சமகோடுகளாகச் செல்லும் சொல், செயல் ஆகிய இரு தன்மைகட்கும் இடையே, இணைப்பும் தொடுப்பும் தேவை. இத்தகைய இணைப்பையும் தொடுப்பையும் தரக்கூடியன, கைதடி சைவ ஐக்கிய சங்கம் போன்ற தத்துவார்த்த அமைப்புக்கள் ஆகும்.

கல்விக்கூடம், நூல் நிலையம், படிப்பகம் போன்ற சாதனங்கள் மூலம் இலக்குகளைக் காட்டி, சங்கத்தைச் சார்ந்த சான்றோர்கள் இயல்பு மூலம் வாழ்வின் இலக்கு நோக்கும் முயற்சிகாட்டி, இச்சங்கம் பரந்த ஒரு தேவையை நிறைவு செய்கின்றது.

ஓர் ஊரில் ஐம்பது ஆண்டு காலம் இத் தேவையை நிறைவு செய்ய ஒரு சங்கம் முயற்சி செய்திருக்கின்றதெனின், அப் பணி போற்றுதல் பெரிதாம். தொடர்ந்து பணி செய்து, நிறைந்து பயனுறுத்த, இந்நாட்டு இந்து இளைஞர்கள் சார்பில் வாழ்த்துகிறேன்.

உள்ளத்தை நெறிப்படுத்த வேண்டும், வழிப்படுத்த வேண்டும், ஒழுங்கமைக்க வேண்டும், இறைவன்பால் ஆற்றுப் படுத்தி, இலக்குகளை வாழ்க்கையாக்க வேண்டும் என இன்று நேற்றல்ல, இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே கூறியதைத் தருகின்றேன்.

> சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
> நலம் புரி கொள்கைப் புலம் பிரிந்து உறையும்
> செலவு நீ நயந்தனை ஆயின், பல உடன்,
> நன்னர் நெஞ்சத்து இன் நசை வாய்ப்ப,
> இன்னே பெறுதி, நீ முன்னிய வினையே.

— நக்கீரர் திருமுருகாற்றுப்படை.

தென்மராட்சிப்பகுதி காரியாதிகாரி

**திரு. இ. சிதம்பரப்பிள்ளை அவர்கள்**

காரியாதிகாரி, சாவகச்சேரி.

***பயன்றூக்காச் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது.***

என்ற வள்ளுவர் வாக்கு, மனிதனின் தனி, சமுதாய வாழ்க்கையில் எக்காலத்துக்கும், எந்நாட்டுக்கும் பொருத்தமானது.

பொருளாதார, கல்வித்துறைகளில், சமயநெறியில் இருந்த தேவையை நிகழ்கால, எதிர்கால நோக்குடன் உற்றுணர்ந்து ஐக்கிய சங்க ரீதியில் நல்ல தோர் சேவையைக் கைதடி வாழ் மக்களுக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் செய்யத் தொடங்கிய பெரியார்கள் செயல் போற்றற்குரியது, பொன்போல்.

50 ஆண்டு நிறைவில் சாதனை மதிப்பீடு செய்து, விழா எடுக்கும் சந்தர்ப்பத்தில் கைதடி ஐக்கிய சங்கக் கடந்தகால, இக்கால இயக்குநர்க்கு சைவ மக்கள் பெரிதும் கடப்பாடுடையர். சைவமும் தமிழும் தழைத்தோங்கச் சங்கத்தினரின் நன் முயற்சிகள் மேன்மேலும் வியாபித்து வழிகாட்டுவனவாகுக.

**திரு. இ. செல்லையா அவர்கள்** J. P.

அக்கிராசனர், கைதடி கிராமசபை.

சற்சங்கம் பொற்காலம் கண்டு வாழும் இந்நாளின் அறிகுறியாக விளங்கி, வீறுநடைபோட்டு வளர்ந்திலங்கும் நூல் நிலையம் "பாடை ஏறினும் ஏடது கைவிடேல்" என்பதை எமக்கு எடுத்துக் காட்டுகிறது.

அறிஞர்கள் பலரும் தம் முதுமைக்காலத்தை நூல்நிலையத்திலேயே செலவிட்டனர். ஏன், எங்கலைத் தெய்வமாய சரஸ்வதிதேவியே ஏடேந்தி நிற்கிருள். இதை உங்கள் சங்க நூல்நிலையத்திற் காணவிழைவோர் மனக்கண்ணுற் காண்க.

கைதடி சைவ ஐக்கிய சங்கத்தின் நற்பணியை இம்மலரில் அமைந்துள்ள கட்டிடத்தின் பிரதிமை எழுதாமல் எழுதிக் காட்டுகிறது. கலைவாணி அருள் பெற்றுச் செம்பொருள் காண்பதேயெம் செயலாக மாறட்டும்.

உ
சிவமயம்

# கைதடி சைவ ஐக்கிய சங்கம்

## வாழ்க

ஏவாதே எப்பணியுஞ் செய்தற் கெனத்தோன்றி
மூவாதே மூத்த முதுசங்கம் — பாவாணர்
போற்றப் பொலிந்தின்று பொன்விழாக் காண்பதனைச்
சாற்றுவமே பார்அறியத் தான்.

தித்திக்குஞ் செந்தமிழின் தெய்வக் கனிமகனும்
முத்துக்கு மாரனருள் முன்னிற்க — எத்திக்கும்
சீர்பெருக நற்பள்ளி செப்பமுறக் காத்ததனாற்
பேர்பெருகும் சங்கஇசை பேசு.

சைவஐக்ய சங்கமிது சைவர்க் குயிராகும்
தெய்வஅருள் சேர்ந்த திருக்கழகம் — உய்யவென
நற்கதியைக் காட்டியபேர் நால்வர்க்கும் நாவலர்க்கும்
அற்புதமாய்ச் செய்யும் அணி.

வையத்து வாழ்வாங்கு வாழவழி காட்டிய ஓர்
தெய்வப் புலவனையுஞ் சிந்தைசெயும் — பொய்யறியா
வான்புகழோர் யாவர்க்கும் வாழ்த்தளிக்கும் வண்மையினால்
தான்புகழி லோங்குந் தனி.

வாழிஐக்ய சங்கமிது வானூர் பெரும்புகழில்
வாழியநற் கைதடியில் வாழ்வோர்கள் — வாழிநிதம்
ஒற்றுமையாற் செல்வத்தால் ஓங்குபெருங் கல்வியினால்
நற்றவத்தால் நாளும் நனி.

"சொக்கன்"

## கைதடி சைவ ஐக்கிய சங்கம்

### 50 வது ஆண்டு உத்தியோகத்தர்கள்

| | | |
|---|---|---|
| தலைவர் : | திரு. அ. சின்னையா, J. P. | |
| உப தலைவர்கள் : | திரு. சோ. சடாட்சரம் J. P. | |
| | திரு. வி. சுப்பிரமணியம் | |
| | திரு. செ. முத்துக்குமாரசுவாமி | |
| பொதுச் செயலாளர் : | திரு. சு. இந்திரராசா | 72 பெப்ருவரி வரை |
| | திரு. வே. கதிர்காமு | 72 மார்ச் முதல் |
| உப செயலாளர் : | திரு. க. நடராசா | |
| தனாதிகாரி : | திரு. க. சிவஞானசுந்தரம் | |
| உப தனாதிகாரி : | திரு. கோ. தேவராசா | |
| கணக்குப் பார்வையாளர்கள் : | திரு. வி. சர்வசத்திவடிவேல் | |
| | திரு. த. இளையதம்பி | |
| வாசிகசாலைப் பொறுப்பாளர் : | திரு. கா.ச. செல்லையா | |

### நிர்வாகசபை உறுப்பினர்கள்

திரு. க. சதாசிவம்
திரு. பொ. முத்துக்குமாரசுவாமி
திரு. ச. திரிலோகசிங்கம்
திரு. சு. சின்னத்தம்பி
திரு. சு. மயில்வாகனம்
திரு. வ. சுப்பையா
திரு. சு. கனகசபாபதி
திரு. தி. நிற்சிங்கம்
திரு. ச. பொன்னம்பலம்
திரு. தா. பாஸ்கரன்
திரு. சே. இராசையா
திரு. வே. கதிர்காமு 72 பெப்ருவரி வரை
திரு. சு. இந்திரராசா 72 மார்ச் முதல்

சங்க ஸ்தாபகர்



முதலியார் ம. முத்துக்குமாரசுவாமி அவர்கள்

முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலை ஸ்தாபகர்


**பிரம்மஸ்ரீ இ. குருசாமிக்குருக்கள் அவர்களின்**

நிழற்படம் கிடைக்கவில்லை.

அன்னாரது பணிகளுக்கு நன்றி செலுத்துகின்றோம்.

---

தலைவர்



**திரு. அ. சின்னையா**

உ

சிவமயம்

## "எம்கடன் பணிசெய்து கிடப்பதே"

# கைதடி சைவ ஐக்கிய சங்க வரலாறு

திரு. அ. சின்னையா அவர்கள் J. P. தலைவர்

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்தகுடி" என்பதற்கமைய பழமையும் பண்பும் கொண்டு இந்நிலப்பரப்பில் சிந்து வெளிநாகரீகம் பரப்பி, தீந்தமிழ் பேசி, சிந்தைக்கினிய சிவசம்பந்தமான சைவத்தைப் பேணி வாழ்ந்த தொல்குடியினர் தமிழர். "பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்" என்பதற்கமைய பண்பும் அன்பும் பாரெல்லாம் வித்திட்ட இனம் இவ்வினம். அன்பே சிவம், சிவமே அன்பு, அன்பு செய்தல் என்பது தமிழைப் பேசுதல். அன்பாய் வாழ்தல் என்பது நீரில் உப்புப் போல் சைவத்திற் கரைந்து வாழ்தல். இவ்வகைப் பின்னணியில் வாழ்ந்தோர் யாழ்ப்பாணர். சிந்தையில் சிவநெறியும் நாவில் சைவத்தமிழும் கொண்டு வாழ்ந்தனர், வாழ்கின்றனர். இதன் சுவடாய் அமைந்ததே யாழ்ப்பாணத்தின் தென்மராட்சிப் பகுதியிற் குடபாற் திகழும் கைதடி சைவ ஐக்கிய சங்கம்.

விடையங்கள் நன்றாக நடப்பதற்கு ஒரு முன்னோடி வேண்டும். கைதடியில் வாழ்ந்த சைவர்களை ஒருங்கிணைத்து சிவவாழ்வு வாழவும் தீந்தமிழ் பேசவும் ஓர் இயக்கம் அவசியம் என்பது ஒரு பெரியார் வாக்கில் வேண்டுவோர் வேண்டுவதை ஈயும் இறைவன் திருவருளால் உதயமானது. அவ் வெண்ணத்தைப் பல பெரியார் மத்தியில் வித்திட்டாரவர். அவ் வெண்ணம் சிந்தையிற் சுழல வழிவகை தேடினார். அவ்வெண்ணம் கைதடி சைவ ஐக்கிய சங்கமாக உதயமானது. அப் பெரியார் தான், திருவாளர் மண்டலநாயகம் முத்துக்குமாரசுவாமி என்பவர். இவர் அக்காலத்தில் தென்மராட்சிப் பகுதி மணியகாரனாகப் பணியாற்றி முதலியார் என்ற சிறப்புப் பட்டமும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

புற்றீசல்கள் போலச் சங்கங்கள் தோன்றி மறைவது நாடும், ஏடும் கண்ட உண்மை. இந்நிலையில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ஆரம்பமான இந்தச் சமய இயக்கம் வரலாற்றுப் பாதையில் ஐம்பது மைல் கற்களைத் தாண்டி இன்னல், இடையூறு, சூறாவளி, அத்தனையையும் வென்று பொன்விழாக் காணும் கோலத்தை எம் மனக்கண்முன் நிறுத்தினால் இந்தச் சங்கமும் இதன் முன்னோடிகளும், "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழா துஞற்றுபவர்" என்ற வள்ளுவர் வாக்குக்கு இலக்கானார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. பொன் விழாவைக் கொண்டாடுவதில், விழா மலரைச் சைவ மணத்துடனும் தமிழ் மணத்துடனும் நாட்டில் நடமாடவிடுவதில் பீடும் பெருமையும் அடைகின்றோம். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து" வைர விழாக் காணவேண்டுமென்று கைகூப்பி வணங்கி நெஞ்சார வாழ்த்துகின்றோம். சைவாபிமானிகளே தோளோடு தோள் நின்றுழைத்து இப்பணியை நிறைவேற்றுங்கள் என்று இளஞ் சந்ததியாரின் நெஞ்சத்தில் அன்பான வார்த்தைகளால் வேண்டுகின்றோம்.

தர்மங்களில் முதற்கண் எண்ணப்படுவது வித்தியாதர்மம். "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சைபுகினும் கற்கை நன்றே." "கல்லாவொருவன் குலநலம்

பேசுதல் நெல்லினுட்பிறந்த பதராகும்மே" "அரங்கின்றிவட்டாடியற்றே நிரம்பிய நூலின்றிக் கோட்டிகொளல்." என்ற பழந்தமிழ்ப் பாக்கள் தமிழ்த் தென்றலுடன் உலாவிய யாவர் செவிகளிலும் புகுந்தன. செவிவழியாக நெஞ்சங்களில் ஊறித்திளைத்தன. இதை நிறைவேற்ற ஒரு முதல்வன் தோற்றினன். அவர்தான் காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ இராம சேதுக்குருக்கள் குருசாமிக்குருக்கள். தனிமரம் தோப்பாவதில்லை பலரின் ஒத்துழைப்பு அவசியம். அத்துடன், சைவப் பாடசாலைகள் இக் காலத்தில் மிகவும் வேண்டப்பட்டன. இது அந்நியர் ஆண்ட காலம். அக்காலத்தில் பிற மதப் பள்ளிகளன்றிச் சைவப் பள்ளிகளில்லை. பலரின் கூட்டு முயற்சியுடன் கிராமவிதானையார் சங்கரப்பிள்ளை சந்திரசேகரம் அவர்களால் உபகரிக்கப்பட்ட காணியில் சிறு பாடசாலை ஒன்று ஆரம்பமானது. இந்நேரத்தில் முன்னின்று உழைத்த குருக்கள் அவர்களையும் உபகரித்த பெரியாரையும் நினைவில் இருத்தல் எங்கடன். 'நிதிமிகுந்தவர் பொறகுவை தாரீர் நிதிகுறைந்தவர் காசுகள் தாரீர்' என்ற பாரதி பாடலை யாவர் நெஞ்சிலும் பதியச் செய்தாரவர். இதன் பெறுபேறு சில ஆண்டுகள் மட்டும் பாடசாலையை நடாத்த முடிந்தது. இடையில் தளர்வு காணப்படவே 1929-ம் ஆண்டு இப்பாடசாலை சைவ ஐக்கிய சங்கத்தாரால் பொறுப்பேற்கப்பட்டது. (அறுபதாம் ஆண்டு அரசாங்கம் சுவீகரிக்குமளவும் பாடசாலை சங்கத்தாரால் நிருவகிக்கப்பட்டது) உயர்தர பாடசாலையாக மிளிர்ந்தது; கட்டிடங்கள் வளர்ந்தன. இப்பாடசாலையில் ஆரம்பகாலத்தில் நன்றாக உழைத்த ஆசிரியர்களான வீ. கணபதிப்பிள்ளை அவர்களையும், சி. கார்த்திகேசு அவர்களையும் என்றென்றும் நினைவு கூருதல் எங்கடன். சைவ ஐக்கிய சங்கத்தாரின் இந்து அபிவிருத்திச் சபை என்ற உபபிரிவினர் சமய வகுப்புக்களைப் பயன் கருதாதும், பலன் எதிர்பாராதும், கைமாறு கருதாதும் நடத்தினார்கள் என்று கூறும் கடப்பாடுடையோம்.

இனி, சங்கப்பணி பற்றி ஒரு சில வார்த்தைகள். 1910-ம் ஆண்டு சிறு பாடசாலையாக ஆரம்பமாகியது; 1929-ம் ஆண்டு சங்கத்திற்குக் கையளிக்கப்பட்டபோது (ஐந்தாம்) 5-ம் வகுப்பு வரையான ஆரம்ப பாடசாலையாக இருந்தது. 1960-ம் ஆண்டு அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட கால எல்லையுள் 10வது வகுப்பையும் 10 ஆசிரியரையும் ஏறத்தாள 350 மாணவரையும் கொண்ட உயர்தர பாடசாலையாகக் காட்சியளிக்க வைத்ததும் அன்றி, சங்கம் முகாமையை நடாத்திய காலத்தில் காணி, கட்டிடம், குடிநீர்க் கிணறு, வாசிகசாலை என்பவற்றை ஆக்கி வளர்த்தது. இதனைக் கிராமத்துக்கு ஓர் முன்மாதிரிப் பாடசாலையாக இயங்க வைத்த பெருமை இச்சங்கத்திற்குரியது. சமயத்தை வளர்ப்பது இதன் தலையாய நோக்கம். விவேகானந்த சபைப் பரீட்சைக்குச் சங்க உதவியுடன் மாணவர்களைத் தோற்றுவித்தும், விடுமுறை நாட்களில் சமய வகுப்புக்களையும், பண்ணிசை வகுப்பை நடத்தியும், சமயப் பிரசங்கங்களை நடத்தியும், சமயப் பிரவேசஞ் செய்வித்தும், கலை, கலாச்சார விளையாட்டரங்குகளை நடத்தியும் வந்தமை குறிப்பிடற்குரியதே. தமிழ்த்திறன் போட்டி, சுகாதார விழா, சமய விழா, கூட்டுறவுத் தினவிழா போன்ற புற நிகழ்ச்சிகளில் மாணவர் அதிகம் பங்குபற்றிப் பெரும் புகழும் உயர் பரிசுகளும் ஈட்டி உள்ளனர். சங்க உழைப்புக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்களை வாழ்த்துவது எங்கடன். பகிரங்கப் பரீட்சைகளில் மாணவர் நல்ல வெற்றியீட்டி உள்ளனர். இங்கு கற்ற பலர் உயர் பதவிகளில் இருப்பதையும் இப்பாடசாலையில் பயின்று பின் இங்கு மாணவர்களைப் பயிற்றும் ஆசிரியர்களானமையையிட்டும் நாம் பெருமைப்படுகின்றோம். இன்றும் பெற்றோர் ஆசிரியர் சங்கம் பாடசாலை வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாயுள்ளது. இரு சாராரின் ஒத்துழைப்பும் நன்றாக வளர்கிறது. வளர்ச்சிப்பணிக்கு

ஆக்கமும் ஊக்கமும் உதவி வருவதையிட்டுப் பெருமைப்பட்டு இப்பணிதொடர வேண்டும் என்று யாவரையுங் கைகூப்பி வணங்கிக் கேட்டுக்கொள்கிறோம். கைதடியில் ஆதியில் ஆரம்பமாகி இன்றுவரை உயர்பணி செய்து வீறுநடை போடும் சைவப்பாடசாலை இதுவென்று சொல்வதில் கைதடி வாழ்மக்கள் அனைவரும் பெருமைப்படுகிறோம்.

இப்பாடசாலைக்கென நிலத்தை 1912-ம் ஆண்டில் கைதடி விதானையார் சங்கரப்பிள்ளை சந்திரசேகரம் அவர்கள் 5 பரப்பும், 1950-ம் ஆண்டில் அவரின் பேரப்பிள்ளை திரு. திருமதி இராமலிங்கம், திரு. திருமதி பொன்னம்பலம், திரு. சி. சேனாதிராசா, திரு. சி. விசுவநாதர் 4 பரப்பும் உபகரித்தனர். முன்னைநாள் தலைவர் திரு. அ. இளையதம்பி அவர்கள் தமது மகள் காலஞ்சென்ற யோகேஸ்வரியின் ஞாபகார்த்தமாக உபகரித்த தொகை ரூபா 1000/- யும் முன் மலாய் நாட்டில் உள்ள கைதடி மக்கள் உபகரித்த தொகை ரூபா 1890/- யுங் கொண்டு 1955-ம் ஆண்டில் 12 பரப்பு வாங்கப்பெற்றது.

கிராமத்தில் புத்தூக்கத்தை உண்டாக்கி மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதே இச்சங்கத்தின் நோக்கம். இவ்வெண்ணம் நிறைவெய்தும் வண்ணம் விதிகள் தயாரிக்கப்பட்டு அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் 16-5-51ல் 75/51 என்ற எண்ணின் கீழ் பதியப்பட்டுள்ளது இச்சங்கம் ஒன்றே என்று கூறாதிருக்கமுடியவில்லை.

தருமங்களில் தலையாயது வித்தியாதருமம். "தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்" என்று சிலம்பியது சிலம்புச் செல்வம். "கற்க கசடற" என்று இயம்பியது வள்ளுவம். இவற்றிற்கமைய வித்தைப்பணி நடைபெற்றுவருகிறது. நால்வர் விழா, நாவலர் விழா, சரஸ்வதி பூசை, திருவள்ளுவர் திருநாள், திருவெம்பாவை, விளையாட்டு, பூங்காவன விழா கோயில்கள் பொதுஸ்தாபனங்கள் போன்ற இடங்களில் கொண்டாடப்படுகின்றன. வெள்ளிதோறும் கைதடி தெற்கு ஞானவைரவர் ஆலயத்தில் கூட்டுப்பிரார்த்தனையைத் தவறாது நடப்பித்து வருவதும் மெச்சத்தக்கது. ஞாயிறு தோறும் காலையில் கைதடி "முத்துக்குமாரசாமி வித்தியாசாலையில் சமய வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன." இவ்வகுப்பு மாணவர் விவேகானந்த சபை நடத்தும் சமயப் பரீட்சைக்குத் தோற்றி நல்ல வெற்றியீட்டியுள்ளனர். சமயப் போட்டிகளில் பங்குகொண்டு பரிசில்களும், சான்றிதழ்களும் பெற்றுள்ளனர், சில நாட்களில் பண்வகுப்பு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. வகுப்புகளை ஒழுங்காக நடாத்தும் கௌரவ சேவையைச் செய்த ஆசிரியர்களுக்கும், ஊக்கமுமாக்கமும் தந்துதவும் அனைவர்க்கும் நாம் என்றும் நன்றிக்கடன் உடையோம்.

வெயிலுக்கு நிழலும் தாகத்திற்கு நீரும் ஆடல் பாடலுக்கு மேடையும் பின்னணியும்போல சிந்தனைவளர்ச்சிக்குக் கற்பனை, ஆக்கத்திறனுக்கு வாசிப்பு மிக மிக அவசியம். வாசிப்பு சிந்தையில் தெளிவை உண்டாக்கி ஆக்கப்பாட்டிற்கு ஓர் ஆழிபோல அமையும் என்பது கண்கூடு. சமய அறிவை அறிய, வளர்க்க, புதினங்களை அன்றாடம் அறிய, இலக்கிய இரசனையை உணர வாசிப்பு அவசியம். இதனை இக்கிராம முன்னோடிகள் உணர்ந்தனர். 1936-ம் ஆண்டு இவ்வெண்ண விதை பயிரானது. ஒரு வாசிகசாலைக்கான காணியை உபகரித்த முன்னைநாள் உப தபால் அதிபரும், மலாயா இளைப்பாறிய உத்தியோகஸ்தரும் இச்சங்க முன்னைநாள் தலைவரும், பாடசாலை முகாமையாளருமான திருவாளர் சரவணமுத்து சுப்பிரமணியம் அவர்களின் அன்பளிப்பை நாம் பாராட்டுகின்றோம். மலாயாவில்

தொழில்புரிந்த கைதடி வாசிகளும் இவ்வூர் வாசிகளும், பிறவூர் வாசிகளும் பணமாகவும் சிரமதானமாகவும் தொண்டுசெய்து வாசிகசாலையைப் பூர்த்தி செய்தனர். "ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்" என்றார் வள்ளுவர். ஊராரால் உண்ணப்படுவது ஊருணி. ஊருணி என்பது ஊரின் நடுவண் அமைந்த நீர்நிலை. இதுபோன்றதே ஓர் ஊருக்கு வாசிகசாலை.

சமயம், இலக்கியம், கலை கலாச்சாரம், நாவல்வகை, இதிகாசம் போன்ற பல இன நூல்கள் இங்கு உள்ளன. நாள், வார, திங்கள் ஏடுகள் தமிழ் ஆங்கிலம் போன்ற மொழிகளில் வரவழைக்கப்படுகின்றன. இரவில் இவற்றை வாசிக்கப் படிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. யாவரும் பயன்பெறும்பொருட்டுப் புத்தகங்கள் தவணை முறையில் விநியோகம் செய்யப்படுகின்றது, பழமையும் புதுமையும் ஒருங்கமைய நடமாடும் நூல் நிலையக் கோயில் இதுவெனல் மிகையன்று.

இவ்வூர்ச் சுற்றுவட்டாரச் சூழ்நிலையில் உள்ளவர்களாக 283 உறுப்பினர்கள் உளர். முன்னோடியாகத் தோள் கொடுத்து உழைப்பவர் ஒரு சிலர் என்று எழுதும்பொழுது மனம் வேதனைப்படுகின்றது. இளஞ்சிறார் அனைவரும் இதில் பங்கு கொண்டு வரலாற்றுப் பெருமைமிக்க இச்சங்கத்தை வளர்க்க முன்வாரீர் என்று அன்பும் பண்பும் கெழுமிய பாணியில் அழைப்புவிடுகின்றோம்.

சங்கத்தின் அவ்வக்காலத்தேவைக்குப் பலவித உதவிகளும் புரிந்த இவ்வூர் வாசிகள் பின் வெளியூர் சென்ற அவர்களுக்கும், வெளியூர் வாசிகளாகவுள்ளவர்களுக்கும் எம் நன்றி உரித்தாகுக. கடந்த அரை நூற்றாண்டு காலமாக சங்க வளர்ச்சிக்காக கௌரவ சேவை புரிந்த சகல உத்தியோகஸ்தர்களுக்கும், சந்தா நன்கொடைகள் நல்கிய பெருமக்களுக்கும் இந்து சமய அபிவிருத்திச் சபை நிர்வாகிகளுக்கும். கைதடி மத்தி, தெற்கு ஐக்கிய நாணய சங்கங்களுக்கும் கைதடி பயிர்ச்செய்கைக் குழுவுக்கும், கைதடி கிராம சபைக்கும் அன்பளிப்புக்கள் செய்தமைக்காக நன்றி நவிலும் கடமைப்பாடுடையோம்.

சங்க வாசிகசாலைக் கட்டிடமே இப்போது எம் பொதுப்பாவிப்புக்காக உள்ளது. முன்பு இருந்த இக்கட்டிடம் போதாமை காரணமாக இம்மண்டபம் நீட்டப்பட்டுள்ளது. நீட்டப்பட்ட மண்டபத்தில் பொன் விழாக்காணும் கோலம் அங்கத்தவர் நெஞ்சில் பாலை வார்க்கும் என்று எண்ணுகிறோம். இப்பணி முற்றுப் பெற உழைத்த பெரியோர்களுக்கும் இதனை முற்றுப்பெறச் செய்த வள்ளல்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

பூவார்மலர் கொண்டு ஈசன் இணையடி எம் இதயத்திருத்தி வான்முகில் வளர உயிர்கள் நன்கு வளர, வாழ, நான்மறை அறங்கள் ஓங்க, நற்றவம் வேள்வி மல்க, மேன்மை கொள் சைவ நீதி புவனமெலாம் பரவ இச்சங்கம் பணிசெய்து வைர விழாக் காணவேண்டுமென்ற உயர் எண்ணத்தோடு நன்றி நவின்று அவன் நாமஞ் செப்பி வணங்குகின்றோம்.

வாழ்க தமிழ் மொழி ! வளர்க சைவ ஐக்கிய சங்கம் ! !

# கைதடி சைவ ஐக்கிய சங்கமும் அதன் உப அம்சங்களும்

திரு. சு. கனகசபாபதி அவர்கள்

கைதை கடலொடுசூழ் கைதடி யூரிலுயர்
கைதடி சைவைக்கிய சங்கத்தார் — வையமிசை
கங்கை நதிபோல் கவின்பெற்று வாழநன்மா
தங்க முகனே துணை.

சைவப் பயிருடன் சைவஐக்கிய சங்கம்
கைதைவாழ் மக்களின் காவலாய்க் கருத்தொடு
தெய்வத் தீந்தமிழ் தமர்அமர் கூட்டி
தேசங்களெல்லாம் தேனதமிழ் மழை பொழிந்திட
கைவரு மன்பும் கவின்பெறும அறனும்
பையவே கொடியாய் பாரினி லோங்க
வையகப் போக்கின் வளர்சுடர் மணியாய்
கைதை இலங்கக் கயமுகன் காவலே.

நால்வர் குருபூசை நாலா பக்கத்திலும்
சால்பொடு சரசுவதி சந்ததமும் நாவலர்
மேல்வரு பூசைகள் மேவவே சைவ ஐக்கிய சங்கம்
ஆல்போல் வளர ஆனைமுகா அருள்வாய்.

செந்தமிழ்ச் சிறப்பும் சிவநெறிக் காப்பும்
பந்தமொடு பசுமை பாரினில் ஓங்க
சங்க வாசகசாலை சைவர்கள் உய்ந்திட
வந்தனை செய்து வளர்ப்பது எம்கடன்.

கவின்பெறு கல்வி கைதையில் ஓங்க
குவிதுணை யானன் குருசாமிக் குருக்கள்
அவிபெறு துணையால் அமை முத்துக்குமார
சுவாமி வித்தியாசாலை சுடர்க தூநெறியில்

இப்பழம் பதியில் இலங்கு மிக்கல்லூரி
செப்பியே முகாமை சேர்க்க இருபத்தொன்பதில்
அப்பால் வகுப்பும் ஆதன கட்டிடமும்
இப்பெரு இமயமாய் ஏற்றியது சங்கம்.

இந்துவின் இணைப்பில் இலங்கிடும் இலங்கை
இச்சிறு தீவின் சிகரம் யாழ்நகர்
அப்பழம் பதியின் அறுமைல் தொலைவில்
அப்பமை கைதடி அங்குவாழ் மக்கள்

மூல முன்னேடி முத்துக் குமாரு
சாலவே இழைத்தது சைவ ஐக்கிய சங்கம்
ஏலவே எம்கடன் பணி செய்வதே
மூலக் கொள்கையாய் முது பெரும் பணியாய்
காலக் கருத்தும் கட்டுரை வனப்பும்
ஆலாய் இந்து அபிவிருத்தி அளிக்க
பாலர் வயோதிபர் பயன் பலவடைய
ஆகமம் சமயம் அத்துடன் தமிழும்
ஏகமும் பரவி ஏற்றம் பெற்றது
வாசக சாலை வளர்மதி யாக
ஆசி யருளும் காசு காணியும்
தேசம் வாழச் சிந்தை பெருக
வாசினை யென்றும் வரம்பின்றி வளர
நாள் வார நல்ல திங்கள்
தாள்கள் பலவும் தந்தனர் பெரியோர்
விந்தை வளர்த்திடும் வித்தியாசாலை
தத்துவப் பெரியார் குருசாமிக் குருக்கள்
தந்த மாபெரும் தத்துவக் கோயில்
நாடு வளரக் குலங்கல்வி யோங்க
தேடிய அறிவும் நாடிய ஆய்வும்
கூடி வளர்த்தனர் இக்கிரா மத்தினர்
நாடு நலம்காண நல்ல சுடர்வளரப்
பாட்டாளி அறிவும் பாமரன் திறனும்
கூட்டாய்ச் சங்கம் குலாவிய சாலைகளும்
சேர்த்தே இணைக்கச் சேர்ந்தனர் பலரும்
அறிவும் அன்பும் திறனும் தர்மமும்
குன்றின் தீபமாய்க் குலவ எங்கும்
கன்று மாவும் ஒன்றிய தன்மையாய்
என்று மெல்லோரும் எங்கும் இணைந்து
நன்ருய்
அவனியில் வாழ ஐம்பதாம் பொன்விழா
அருள்வாய் இறைவா அன்பு மறனும்
வருக வளர்க வாய்மையாய்ச் சங்கம்.

---

அறவழி வாழ வேண்டும் அன்பதி சாலை வேண்டும்
குறமகள் வள்ளி காந்தன் குலவிய கோலத்தாலே
திறமுடன் கல்விக் கோயில் திகழவெண் திக்குமாக
உறவிடும் வாசிகசாலை யோங்குக பல்லூழி வாழி.

# முன்னைய நாள் தலைவர்கள்



திரு. நா. மானார்




திரு. அ. இளையதம்பி



திரு. கா. மாணிக்கம்



திரு. ச. சுப்பிரமணியம்



திரு. சி. வேலாயுதர்



கைதடி சைவ ஐக்கிய சங்க வாசிகசாலை



முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலை - கைதடி

# சிவத்தியானம்

திரு. அ. செல்லத்துரை அவர்கள்

"குரங்குபோல் மனங் கூத்தாடுகின்றதே. இதன் கூத்தை எப்படி யடக்குவ தென்று தெரியவில்லையே. நன்று சொன்னாய். இதற்கு நல்ல மருந்துன்னிட முண்டு. நீ அதை மறந்து போனாய். சொல்லுகிறேன் கேள்."

சிவத்தியான மென்னும் மருந்தைத் தினந்தோறும் சாப்பிட்டுவா. மனக் குரங்கின் பிணி மாறும்.

மனத்தை ஒருவன் அடக்கி வெற்றி கொள்ள முழு மனத்தோடு விரும்புவானானல் சிவத்தியானத்தைத் தினந்தோறும் செய்துவரக் கடவன்.

வண்டுகள் பூவைக் கிண்டித் தேனை உண்டு ஒன்றுமறியாமற் கிடப்பது போல் பக்தனும் சித்தமாகிய பூவைச் சிவத்தியானத்தினுற் கிண்டி ஆங்கு வரும் ஆனந்தத் தேனை உண்டு ஒன்று, இரண்டு, நன்று, தீதென்றறியாமற் றேங்கிக் கிடக்கின்றான்.

ஓ மனிதனே! உன்னை ஒன்றும் தாக்கமாட்டாது. எழுந்திரு! விழித்துக் கொள்! சிவத்தியானம் என்னுந் திறவுகோலால் மோக்ஷ வீட்டின் கதவைத் திறந்துபார். எல்லாம் வெளியாகும்.

சிவத்தியானத்தை அசட்டை பண்ணுதே, ஈற்றில் யாவும் நன்மையாய் முடியும்."

— நற்சிந்தனை.

உலகின் கண்ணுள்ள உயிர் வர்க்கம் எல்லாம் இன்பத்தை யடைதலே குறிக்கோளாகக் கொண்டு இடையருது தொழிற்பட்டுக்கொண்டிருக்கின்றன; இன்பம் என்றால் என்ன? பட்டினியால் வாடும் ஒருவனுக்குச் சிறந்த உணவு உண்ணலே இன்பமாம். பணமில்லாதவனுக்குப் பொருள் தேடிக் குவிப்பதே இன்பமாகும். நோய் வாய்ப்பட்டவனுக்கு நோயற்ற வாழ்வு நடத்தலே இன்பமாம். இவ்வண்ணம் இன்பத்தின் வரைவிலக்கணம் அவரவர் மன நிலைக்கும் அறிவுத் திறனுக்கும் வாழ்க்கைத் தரத்திற்கும் ஏற்ப மாறுதலடைந்து கொண்டேயிருக்கும். அநித்தியப் பொருள்களைத் தேடியடையும் இன்பம் சில நாட்களில் முடிந்துவிடும். சிறு குழந்தைகளாக இருக்கும்போது கனிகள் உண்ணவும் கட்டி பட்ட கரும்புகள் தின்னவுமே பேராசையாகும். அந்த வயதில் அவர்கள் இன்பம் அவ்வளவிலேயமையும். வளர்ந்து வாலிபம் எய்தியவுடன் இந்நிலை மாறுகின்றது. பாலுணர்ச்சி பிடர்பிடித்துந்துகின்றது. பனிமலர் சூடும் பாவையரை நாடிச் சென்று கூடியடையும் இன்பத்திலே காலத்தைக் கழிக்கின்றனர் காளையர். இவ்வாறு இன்ப வாழ்க்கையைச் சில காலம் நடத்திய பின் அதனாலும் திருப்தியுருமல் நாடாளும் தலைவனாகவும் பெரும்புகழ் படைத்த வீரனாகவும் விளங்குவதிலேயே பெரும்பாலோர் நாளும் சலியாது உழைத்து அயர்கின்றனர். நாடவர் புகழ்ந்துரையையும் நன்மதிப்பையும் நாடியே பணத்தையும் பரிசில்களையும் அள்ளிக்கொடுத்து அதனால் வரும் பதவிகளையும் புகழினையும் பெற்று இன்பம் அடைகின்றனர். இப்பருவம் ஏறத்தாழ வாலிபத்திற்கும் வயோதிபத்திற்கும் இடைப்பட்ட பருவமாகும். இதன்பின் இது காலவரையும் தாம் பெற்ற இன்ப

மெல்லாம் நிலையாகா வென்றும், நிலையான இன்பம் எது என்பதை நாடி அறிவதிலும், அதனையடைய வழிவகைகளைக் கண்டு பிடிப்பதிலுமே காலத்தைச் செலவிடுவர் பகுத்தறிவுள்ள மனிதர். அப்போதுதான் அநித்தியப் பொருள்களினால் அடைந்த இன்பம் அநித்தியமென்றும், நித்திய இன்பம் அடைய நித்தியப் பொருளையே நாடவேண்டும் என்ற தெளிவினையடைவர். அந்த நித்தியப் பொருள் இடையறா இன்பம்; ஏகவஸ்து; அத்துவிதப் பொருள்; எல்லாம் வல்ல இறைவன் ஒருவர் என்றே அனுபவத்தாலும் அறிவறிந்தோர் வாக்காலும் முடிவு செய்வார்கள்.

எல்லாம் வல்லவரும், என்று முள்ளவரும், யாவுமறிபவரும், கருணையேயுருவானவருமாகிய இறைவனே இடையறா இன்பத்தினை, — வீடுபேற்றினை உயிர்களுக்கு அளிக்க வல்லவர். அவரை அடைவதற்குச் சிறந்த நெறி **சிவத்தியானம்** ஒன்றேயாகும். இதனை உணர்த்தவே அப்பர் பெருமான்,

> **'கனியினும் கட்டி பட்ட கரும்பினும்**
> **பனிமலர்க் குழற் பாவை நல்லாரினும்**
> **தனிமுடி கவித் தாளு மரசினும்**
> **இனியன் தன்னடைந்தார்க் கிடை மருதனே'**

என்றார்கள்,

இப்பாசுரத்தின் பொருளை இதுவரை ஐந்தாம் வேற்றுமை ஒப்புப் பொருளில் வைத்து விளக்கினோம். இனியிதன் பொருளை ஏழாம் வேற்றுமை இடப்பொருளில் வைத்துப் பார்த்தால் கனிகளிலும், கட்டிபட்ட கரும்பிலும், பனிமலர்க்குழற்பாவை நல்லூரிலும், தனிமுடி கவித்தாளு மரசிலும் நின்று விளங்கி அப்போதைக் கப்போதைக்கருள் செய்த பெருமானே ஈற்றிலும் தன்னையடைந்தார்க்குப் பேரின்பப் பொருளாயிருக்கின்றான் என்னும் பொருளும் பொலிந்திருப்பதைக் காணலாம்.

சிவத்தியானம் என்றால் சிவபிரானைத் தியானித்தல் என்பது பொருளாகும்.

மக்கட் கூட்டத்தின் செயலெல்லாம் மனம் வாக்குக் காயம் என்று கூறப்படும் திரிகரணங்களின் மூலமாகவே நிகழ்கின்றன. இவற்றுள்ளும் காய வழிபாட்டின் செயலுக்கும் வாக்கு வழிபாட்டின் சொல்லுக்கும் மூலமாக இருப்பது மனத்தின் செயலாகிய நினைப்பேயாகும். மனம் ஒன்றை நினைத்த பின்பே சொல்வதும் செய்வதும் நிகழ்கின்றன. மனத்தால் நினைக்காதபோது சொல்லும் செயலும் நிகழாவென்பது யாவருமறிந்த வுண்மையாகும். திரிகரண சுத்தியின்றி எக்காரியத்தையுஞ் செவ்வனே சாதிக்க முடியாது. ஆகவே, இத் திரிகரண சுத்திக்கு இன்றியமையாது — முதலாவதாக வேண்டப்படுவது மனச்சுத்தியேயாகும். மனச்சுத்தி வந்தவுடன் ஏனைய இரண்டும் தாமேயமையும்.

கற்றுக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த சான்றோர் யாவரும் மனக் குரங்கின் தன்மையை அடக்க வேண்டும் என்றும், அவ்வண்ணம் செய்யாவழி நன்மையடைய முடியாதென்றும், காடுங் கரையும் மனமாகிய குரங்கு கால்விட்டோட அதன் பிறகே ஓடுந்தொழிலாற் பயனில்லை யென்றும் அழுத்தந் திருத்தமாகக் கூறியுள்ளார்கள். மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தே அறமெனப்படும். சித்தவிருத்தியைத் தடுத்தலே யோகமாகும். மனம் யாதொன்றினைப் பற்றுகின்

றதோ பின் அதே மயமாகவே மாறிவிடுகின்றது. நன்மையைப் பற்றினபோது நன்மனமாகவும் தீமையைப் பற்றினபோது, தீமனமாகவும் அது திகழும்.

இம் மனம் என்னும் யானையானது காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மார்ச்சரியம் ஆகிய மதங்கொண்டு பிரபஞ்சமாகிய காட்டிற் புக்கு அறவகைத் தருக்களை யொடித்துத் துன்பமாகிய கடலில் ஆழ்ந்து கெடாதவண்ணம் அறிவென்னும் அங்குசத்தாலடக்கி, நல்லொழுக்கம் என்னும் பாசத்தாற் பிணித்துத் தியானம் என்னும் கூடத்தில் நிறுத்திஞல் அருளென்னும் தெண்ணீர் பருகி இன்பமுறும். இங்ஙனம் செய்வித்தல் ஞானம் என்னும் பாகனது கடமையாகும். பாகஞகிய ஞானம் தன் கடமையைச் செய்யாவழி மதம்பொழியும் யானை தன் பாகனைக் கொன்று தொலைத்து விடுவது போலவே மனமும் ஆன்மாவின் ஞானத்தை மறைத்து விடும்.

இனி, மனத்தையடக்குவது இலகுவான காரியமன்று, அது கல்லினும் கடியது; காற்றிலும் கடிது; தீயிலும் கொடிது; கடலினும் பெரிது. அதஞலன்றே "சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறமரிது" என்ருர் தாயுமானவர். ஆகவே, கொஞ்சம் கொஞ்சமாய் மனத்தினைக் கூடுமட்டும் அடங்கப் பழகல் வேண்டும். தாவித் தாவிச் செல்லும் மனத்தைக் கூவிக் கூவிக் குடியிருத்தல் வேண்டும்.

முற்பிறப்புக்களிலே யாம் செய்த புண்ணிய பாவங்களே இப்பிறப்பிலே நாமனுபவிக்கும் நன்மை தீமைகளாகின்றன. இப்பிறப்பிற் செய்யும் விருப்பு வெறுப்புக்களே வித்தாகி யடுத்த பிறப்பில் இன்பதுன்பங்களாகின்றன. இந்த இருவினைகளாகிய பந்திப்பிஞல் நலியாது "என் கடன் பணி செய்து கிடப்பதே" யென்றும், "கூடுமன்பினிற் கும்பிடலே யன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கிஞர்" எனவும் அருளாளர் கட்டளையிட்டருளியவாறு,

> **"ஆசையறுமின் ஆசையறுமின்**
> **ஈசஞேடாயினு மாசையறுமின்"**

என்றபடி ஆராவியற்கையாக வெழும் அவாவினை நீத்து, செய்வதெல்லாம் சிவதொண்டாகவும், பார்ப்பதெல்லாம் சிவமாகவும் செய்தும் பார்த்தும் வருவோமாயின் சிவத்தியானம் தானே கைகூடும்.

> *சிவத்தியானஞ் செய் செய் செய்*
> *சிவமேயாமெனல் மெய் மெய் மெய்*
> *அவனியனைத்தும் பொய் பொய் பொய்*
> *அதனையறிந்து உய் உய் உய்.*

— யோகசுவாமிகள்.

---

"உலக சிந்தனைகளும் கவலைகளும் உன் மனத்தைக் குழப்பாதபடி பார்த்துக்கொள்; செய்ய வேண்டுவவற்றை உரிய காலத்தில் செய்துமுடி. உன்மனம் எப்போதும் இறைவனிடமே ஊன்றுபடி செய்"

ஸ்ரீ இராமகிருஷ்ணர்.

உ

சிவமயம்

# சைவ மக்களுக்கொரு கற்பகக்கனி

திரு. சு. தியாகராசா அவர்கள்

இந்நிலவுலகில் வாழும் உயிரினங்களுள்ளே மக்கட் பிறவியினர் மேலானவர். ஏனைய உயிர்களெல்லாம் ஓரறிவு முதல் ஐந்து அறிவு மாத்திரமுடையவையாயிருப்ப, மக்கட் பிறவியினரோ, கண்ணாற் காண்டல், காதாற் கேட்டல், நாவால் உண்டல், மூக்கால் முகர்தல், மெய்யால் தீண்டல் ஆகிய ஐந்து அறிவோடு பகுத்தறிவு என்னும் ஆறும் அறிவையுமுடையராயுள்ளனர். ஆறும் அறிவாகிய இப்பகுத்தறிவில்லையேயானால் எமக்கும் எங்கள் ஆடு மாடு முதலிய மிருகங்களுக்குமிடையில் வேறுபாடு எதுவுமேயில்லை. தாவரம் முதல் மக்களீறாகிய எல்லா உயிர்களும் இன்பத்தையே நாடிநிற்கின்றன. ஆறும் அறிவாகிய பகுத்தறிவையுடைய மக்கள் இன்பத்தைப் பெறமுயலும் வழிகள் சமயங்கள் எனப்படுகின்றன. அவை, உலோகாயதம் முதல் சைவம் ஈறாக இருபத்துநான்கு என்று வகுக்கப்பட்டுள்ளன. இன்று, உலோகாயதம் உருஷியா, சீன நாடுகளில் பெருமிடம் பெறுகின்றதென்று பொதுவாகக் கருதுகின்றோம். அது இல்லாத நாடு எதுதானும் இருப்பதாகக் கூறமுடியாது. இத்தன்மையதாகிய உலோகாயதம் முதலாகிய சமயங்களெல்லாவற்றிலும் மேலான அறிவையும் இன்ப வாழ்வையும் தரும் சமயம் சைவசமயம். சைவம் சிவசம்பந்தமுடையது. சிவம் மங்களகரமானது, இன்பமயமானது, இன்பந்தருவது. "சைவசமயமே சமயம்" என்று தாயுமான சுவாமிகள் அருளியது இதனாலேயாம்.

இத்தன்மையதாகிய பெருமைவாய்ந்த சமயத்தை மேற்கொண்டு வாழும் ஈழநாட்டு மக்களாகிய நாம் ஏனைய மக்களிலும் மேலான இன்பவாழ்வுடையராய் விளங்கின்றோமா ? இல்லை. இல்லையென்று சைவமக்கள் அனுமதியிட்டுக் கூறுவர். இந்நிலைமைக்குக் காரணம் என்ன ? இதை எவ்வாறு திருத்தியமைக்கலாம் ? சைவ ஒளிகுன்றிய காலத்தில் சமயாசாரிய மூர்த்திகள் தோன்றிச் சைவத்தை மலைவிளக்காக்கினார்கள். மற்றொருகால் சைவஒளி குன்றியபோது நாவலரவர்கள் தோன்றி அதைப் பரவச் செய்தார்கள். அவர் அன்று வெளியிட்ட கருத்து இன்றும் பொருந்துவதாகத் தோன்றுகின்றது. சைவ நன்மக்களே ! சைவத்தொண்டர்களே ! அவருடைய சொல்லுக்கு நாம் செவிசாய்ப்போமா ?

"யாழ்ப்பாணத்திலுள்ள சைவசமயிகளே, உங்களிடத்துள்ள அன்புமிகுதியினாலே நாம் சொல்பவைகளைக் கேளுங்கள். நீங்கள் சிவதீட்சை பெற்றும் என்னை ! விபூதி, ருத்திராஷதாரணம், பஞ்சாக்கரசெபம், சிவாலயதரிசனம் இவைகளை நியமமாகச் செய்தும் என்னை... ஊர்கள்தோறும் கோயில் கட்டுவித்துப் பூசை திருவிழாக்கள் செய்வித்தும் என்னை ! சிவராத்திரி, கந்தசட்டி, கார்த்திகை, சுக்கிரவார முதலிய விரதங்களினாலும் அங்கப்பிரதக்ஷிணத்தினாலும் உடம்பை வருத்தியும் என்னை ?" என்று கேட்கின்றார் அவர். இவை பயனற்றவை என்பதா அவருடைய கருத்து ? அவர் தொடர்ந்து சொல்லும் சொற்களில் அவருடைய கருத்துத் தெளிவாகின்றது.

"நீங்கள் உங்கள் சமயக்கடவுளாகிய சிவபெருமானுடைய இலக்கணங்களையும், ஆன்மாவைப் பந்தித்த பந்தத்தின் இலக்கணங்களையும், புண்ணிய பாவங்களையும், அவைகளின் பயன்களாகிய சுவர்க்க நரகங்களையும், சிவபெருமானை

வழிபடும் முறைமையையும், அதனாலே பெறப்படும் முத்தியின் இலக்கணங்களையும் கிரமமாகப் படித்தாயினும் கேட்டாயினும் அறிகின்றீர்களில்லை. உங்கள் பிள்ளைகளுக்கு இவைகளைப் படிப்பிக்கின்றீர்களில்லை..." (யாழ்ப்பாணச் சமயநிலை) என வரும் சொற்கள் இன்றுள்ள நிலைமையைப் படம்பிடித்துக் காட்டுவதுபோற் காட்டுகின்றன. ஆனால், நாவலர் காலத்திற் போலன்றி இன்றுதானே பண்டிதர்கள், புலவர்கள், வித்துவான்கள், சைவப்புலவர்கள், சித்தாந்த பண்டிதர்கள் பெருந்தொகையினர் தோன்றியுள்ளார்கள் என்று ஒருவர் சொல்லலாம். மறுத்துரைத்தற்கு வழியில்லை. ஆனால், எங்கள் நிலைமை சீர்கெட்டு நிற்பதற்குக் காரணம் என்ன என்று நாம் மீட்டும் கேட்டு நிற்கலாம்.

யுகங்கள் பல கழிந்தாலும் சிறப்புக்குன்றாது அறிவொளி பரப்பி விளங்கும் பொய்யா மொழிகளை எங்களுக்கு வழிகாட்டிகளாய் அன்றே தெய்வப் புலவர் அருளியுள்ளார்கள்.

*"வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்*
*கியாண்டு மிடும்பை யில"* என்று அருளிய அவர்,

*"தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்*
*மனக்கவலை மாற்ற லரிது"* என்றும் அருளியுள்ளார்.

எங்கள் சமூகம் எல்லாப் பக்கத்திலும் கவலை நிறைந்துள்ளது. எதை எதைத்தான் செய்தாலும் அவற்றால் உரியபயன்பெறுமாறு சிவபிரானது திருவடியை நாம் அடையவில்லை என்பது சொல்லாமலே அமைகின்றதல்லவா? நாவலர் கருத்தும் அதுவே என்று நாம் கொள்ளவேண்டியதாகின்றதன்றோ? ஆகவே, இவ்விடத்தில் மற்றொருமலைவுக்குத் தெளிவு வேண்டப்படுகின்றது.

அத்தெளிவையும் தந்தருளுகின்றார் தெய்வப் புலவர்.

*"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ*
*னற்றா டொழாஅ ரெனின்"*

என்பதனால் இறைவனுடைய நல்ல திருவடிகளை வழிபடாதவர்கள் தாம் பெற்ற கல்வியாற் பயனடையார் என்று அறிவுறுத்திய அவர், வாழ்க்கையின் எத்துறைக்கும் பொருந்துவதாய்,

*"கற்க கசடறக் கற்பவை கற்றபி*
*னிற்க வதற்குத் தக"*

என்று ஆணையும் தந்தருளியுள்ளார்கள். இந்த இரண்டு அருள்மொழிகளாலும், நாம் எமக்கு இன்றியமையாது வேண்டப்படும் சைவக் கல்வியை முறையாய்க் கற்கவில்லை, கற்றபடி இறைவன் திருவடிகளை முறையாய் வழிபடவில்லை, அப்படிச் செய்யாமையால் பெருங்கவலைக்குள்ளாயினோம் என்று வருந்தி நின்று ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கின்றோம். சைவச் சகோதர சகோதரிகளே, இவ்வாறு கருத்துரைகளை வெளியிட்டோ, மேடைகளிற் பேசியோ மகிழ்ந்து, செயற்பாலது செய்யாது வாளாவிருப்போமா?

வாளாவிருத்தல் மரபாகாதென்றுணரும் ஒவ்வொருவரும் "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்ற முறையில் திருவருளைவேண்டி, சைவத்திருமுறைகளையும் சித்தாந்த சாத்திரங்களையும் தாம் படித்தும் மற்றவர்களைப் படிக்கச்செய்தும், படித்தபடி சாதனை செய்தும், மற்றவர்களைச் சாதனை செய்யத் தூண்டியும் வாழவேண்டும். இப்படிச் சொன்னவுடன், இவ்வுலக வாழ்வில் வேண்டப்படும் பொருளாதாரம் முதலிய பற்றிச் சிந்தியாது ஒரு பக்கத்தில் ஒதுங்கிநின்று வாழ

வேண்டிய நிலைமை பொருந்துவதாகச் சிலர் நினைத்துவிடுகிருர்கள். அப்படி நினைப்பது தவறு.

"தூண்டு சுடரனைய சோதி ... கருதுவார்க்காற்ற எளியான் ... வேண்டுவார் வேண்டுவதே ஈவான்..." (அப்பர்) "பொன்னும் மெய்ப்பொருளுந் தருவான்... போகமும் திருவும் புணர்ப்பான்..." (சுந்தரர்) ஆகிய இறைவனை உரியவாறு வழிபடுவோமாஞல் எத்துறையிலும் இன்ப வாழ்வு எம்மை எதிர்நோக்கி நிற்கும் என்பது திண்ணம்.

எனவே, முறையான இறைவழிபாடு பற்றி இங்கே சிந்திக்க வேண்டியவர்களாகிரும். விபூதி உருத்திராக்கம், பஞ்சாக்கரம் ஆகிய மூன்றும் இறைவழிபாட்டுக்குரிய முக்கிய சாதனங்கள் என்று சைவநூல்கள் சொல்லுகின்றன. இவை ஒன்றுக்கொன்று சிறப்புக்கொடுப்பவை; சேர்ந்து நிற்பவை. இவை பற்றி விளங்கவேண்டியதவசியம். ஆயினும், விரிவு இவ்விடத்தில் அஞ்சவேண்டிய தொன்ருயமைதலின், ஈற்றில் இலங்கும் பஞ்சாக்கரம் பற்றி, எடுத்துக்கொண்ட பொருளுக்கேற்பச் சிந்திப்போம். ஏனையவை அதைப் பிரியாது தொடரும் என்பது நம்பிக்கை.

சைவ முதல் நூல்களாகிய வேதசிவாகமங்கள் முதல் உலகிலுள்ள எல்லா நூல்களின் பொருள்களும் பஞ்சாக்கரத்தில் அடங்கியுள்ளன என்ற பேருண்மை ஒன்றை,

"அருள் நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்
பொருள்நூல் தெரியப் புகின்"

என்பதஞல் திருவருட்பயன் எமக்கு அறிவுறுத்துகின்றது. இவ்வாறு அறிவுக் களஞ்சியமாய் விளங்கும் இதை, இவ்வுலகம் முழுதுக்கும் நன்மை பயக்கும் ஒன்றை, நான் கண்டுகொண்டேன், அது நமச்சிவாயம் என்னும் ஒப்பற்ற ஒரு கனி என்று,

ஒன்றுகண் டேனிவ் வுலகுக் கொருகனி
நன்றுகண் டாயது நமச்சிவா யக்கனி
மென்றுகண் டாலது மெத்தென் றிருக்கும்
தின்றுகண் டாலது தித்திக்குந் தானே      என்பதஞல்

அருட்பேருவகை கொண்டு அருளுகின்ருர் திருமூலநாயஞர். இதை முறைப்படி ஓதிஞல் நாம் வேண்டும் எதையும் பெறலாம், வேண்டிய எல்லாவற்றையும் தரும் கற்பகக்கனியாய் இது அமைகின்றது என்று அருட்செல்வர்கள் எல்லோரும் உறுதிமொழி அருளியுள்ளனர்.

தீவினைப் பயஞய் வரும் தும்மல் இருமல் முதலான துன்பங்களும் கொடிய நரகமும் இதை ஓதிஞல் நீங்குமென்றும், செய்த தீவினைகள் மலைபோலக் குவிந்தாலும் அவற்றை நீக்குவதோடு முத்தியின்பத்தையே இது பயக்குமென்றும்,

தும்ம லிரும லொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினைபடர்த் தெய்தும் போழ்தினு
மம்மை யினுந்துணை யஞ்செ ழுத்துமே

மந்த ரம்மன்ன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேற்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமா
னந்தி நாம நமச்சி வாயவே      என்பவற்ருல்

திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளுகின்றார். இன்னவும் பிறவுமாய் இதை ஓதுவதனால் வரும் பயன்களைச் சமயாசாரிய மூர்த்திகள் நாலு பதிகங்களாலும் தனிப்பாடல்களாலும் அருளியுள்ளனர். பிற அருட்செல்வர்களும் பிற பலவாறு புகழ்ந்தருளியுள்ளார்கள்.

பஞ்சாக்கரம், தூல பஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம், காரண பஞ்சாக்கரம், மகாகாரணம், மகாமனு என்று ஐந்து வகைப்படும். போககாமிகளுக்கு அவர்கள் வேண்டும் எல்லாம் தருவது நமசிவாய என்னும் தூலபஞ்சாக்கரம். சிவாயநம என்பது உலகத்தொடர்புடைய முத்திகாமிகளுக்குரியது. ஏனையவை படிப்படியாய் அதன் மேற்படிகளிலுள்ளவர்களுக்காகும். ஈற்றிலுள்ள மகாமனு தூயமுத்திநிலை எய்தியமையைக் குறிக்கும். இந்நிலைமையில் சிவதரிசனமேயன்றிப் பிறிது காட்சி இல்லை.

இப்பஞ்சாக்கரத்தையே திருமேனியாகக் கொண்டு நடராச மூர்த்தியாய்ப் பஞ்சகிருத்திய திருநிருத்தஞ் செய்தருளுகின்றது சிவபரம்பொருள். இவ்வுண்மையையும், மேலே காணவந்த எல்லா உண்மைகளையும் தெரித்தருளுகின்றது.

**அஞ்செழுத்தே ஆகமமும் அண்ணல் அருமறையும்**
**அஞ்செழுத்தே ஆதிபுரா ணம்அனைத்தும் — அஞ்செழுத்தே**
**ஆனந்த தாண்டவமும் யாவைக்கு மப்பாலாம்**
**மோனந்த மாமுத்தி யும்**

எனவரும் உண்மை விளக்கம்.

இவ்வாற்றால், உலக வாழ்க்கையில் வேண்டப்படும் எல்லாவற்றையும் பெறுவதோடு,

***கற்றவர் விழுங்குங் கற்பகக்கனியை கரையிலாக் கருணைமா கடலை***
***மற்றவரறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணி விளக்கைச்***
***செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத் திருவீழிமிழலை வீற்றிருந்த***
***கொற்றவன் றன்னைக் கண்டுகண்டுள்ளங் குளிர வென்கண்கள் குளிர்ந்தனவே***

(சேந்தனார் திருவிசைப்பா)

என்று பரவசமுற்றிருக்கும் சிவதரிசனத்தையும் தருவதாய் விளங்குகின்றது பஞ்சாக்கரம் என்னும் கற்பகக்கனி என்பது காண்க.

இவ்வித பேரருட்காட்சிகளைக் கண்ணுற்ற சைவ மக்களாகிய நாங்கள், விபூதி, உருத்திராக்கம், பஞ்சாக்கரம் என்னும் சைவசாதனங்களை மேற்கொண்டு தூய சைவ வாழ்க்கை வாழ்ந்து,

**ஞானவாள் ஏந்தும்ஐயர் நாதப் பறையறைமின்**
**மானமா ஏறும்ஐயர் மதிவெண் குடைகவிமின்**
**ஆனநீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்**
**வானவூர் கொள்வோம்நாம் மாயப்படை வாராமே.**
**தொண்டர்காள் தூசிசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீர்**
**ஒண்திறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்**
**திண்திறல் சித்தர்களே கடைக்கூழை செல்மின்கள்**
**அண்டர்நா டாள்வோம்நாம் அல்லற்படை வாராமே**

என்று மணிவாசகப் பெருமான் அருளியவாறு திருப்படையெழுச்சியிற் பங்குபற்றிப் பேரின்பப் பெருவாழ்வு பெறுதற்குரியராவோமாக.

சுபம்.

# "திருவடி வழிபாடு"

**வித்துவான் மு. சபாரத்தினம் அவர்கள்**

தமிழ் மொழியில் நிலேத்திருக்கும் நீதி நூல்களில் தலேமையும் தொன்மையும் வாய்ந்தது திருக்குறளேயாகும். மனித இனம் உள்ளும் புறமும் தூய்மை பெற்று இறைவனே உணர்தல் வேண்டும். திருவருளேத் துணேக்கொண்டு இறைவனது திருவடி நிழலில் உயிர்களனேத்தும் இன்புற வாழவேண்டும் என்பதே திருக்குறளின் தலேயாய கொள்கையாகும். இதனேக் கடவுள் வாழ்த்து, மெய்யுணர்தல் ஆகிய இரு அதிகாரங்களிலும் திருவள்ளுவர் கூறியிருக்கும் கருத்துக்களால் நன்கு அறியலாம்.

இறைவனது திருவுருவத்தில் திருவடி மிகச் சிறப்புடையது ஆகும். "நின்னிற் சிறந்த நின்தாள் இணேயவை" என்னும் பரிபாடல் இதனே வலியுறுத்தும். ஞானியர்கள் அனேவரும் இறைவனது திருவடியைச் சிறப்பித்து, அதனேயே தமக்குப் புகலிடமாகக் கொண்டு உய்ந்துள்ளனர். அந்நிரலில் ஒருங்கு வைத்து எண்ணத்தக்கவர் திருவள்ளுவப் பெருந்தகையார் ஆவர். அவர் கடவுள் வாழ்த்தில் இறைவனது திருவடியை ஏழிடங்களிற் குறித்துள்ளார். திருவடியைத் 'தாள்,' 'அடி' என்னுமிரு சொற்களாற் குறித்துள்ளார். தாளினே 'நற்றாள்' என்றும், அடியை 'மாணடி' என்றும், முதற்கண் அடைகொடுத்து வழங்கியவர் பின் அடைமொழியின்றியே அவ்விரு சொற்களேயும் வழங்கிச் சென்றுள்ளார்.

நற்றாள் என்பது நன்மையை உடையதாள், நன்மையை அடைதற்குக் காரணமாகிய தாள் என்றெல்லாம் விரித்துப் பொருள் காண்டற்குரியதாகும். உயிர் உடலோடு கூடி வாழ்கின்றபொழுது அதற்கு வருகின்ற துன்பங்கள் இரண்டு, ஒன்று துன்பம்; பிறிதொன்று கவலே; துன்பம் மூவகைப்படும். ஒன்று உடலேப்பற்றிவரும் தலேநோய் முதலியனவும், மனத்தைப்பற்றி வரும் காமம் முதலியனவும் ஆகும். பிறிதொன்று மனிதர், விலங்கு முதலிய பிற உயிர்களால் வருவனவாகும். மற்றொன்று காற்று, மழை, இடி முதலியவற்றால் நேரும் துன்பமாகும். கவலே என்பது மேற்கூறிய இடும்பைகள் காரணமாக மனம் அமைதியின்றி 'இதற்கு இனியாது செய்வது' என்று ஏங்கி இருப்பதாகும். இவ்விரு வகை நோய்களேயும் உறுதவாறு காக்கும் வல்லமையுடையது இறைவனது திருவடியேயாகும். இனி உயிர் உடம்பினின்றும் நீங்கி வாழுங் காலத்து மல இருளுற்று உறங்காமல் இறைவனது திருவடி நிழலில் இடையறாது இன்புற்று நிற்கவும் அத்திருவடியே காரணமாகின்றது. இத்தகைய நன்மைகளேத் தன்பால் கொண்டிருத்தலானும், அந்நன்மைகளே உயிர்கள் அடைவதற்குத் தாம் காரணமாக இருத்தலாலும்தான், திருவடியை 'நற்றாள்' எனச் சிறப்பித்துள்ளார் வள்ளுவர்.

மாணடி என்பது மாண்பினே உடைய அடி என விரியும். மாண்பு என்பது குணம், செயல் ஆகிய இரண்டையும் குறிக்கும். தன்னேச் சார்ந்தாரைக் காப்பது திருவடியின் குணமாகும். தன்னேச் சாராத உயிர்களேயும் படைப்பு முதலிய ஐந்தொழில்களாலும் பக்குவப்படுத்தித் தன்னேச் சாரவைப்பதே திருவடியின் செயல்களாகும். இவ்மாண்பினேப் "போற்றியருளுக நின்ஆதியாம் பாதமலர்" எனத் தொடங்கும் திருவெம்பாவைப் பாடல் நன்கு விளக்கும். இது பற்றியே "முத்திநான்ற மலர்ப்பதத்ததே நாடு" என ஞான நூல்களும் நவிலுகின்றன.

இத்தகைய பெருமை சான்ற திருவடியை மனத்தால் இடையறாது நினேந்து வழிபடவேண்டுமென்பதே வள்ளுவர் தமது குறள்களில் வலியுறுத்துகிறார்கள்.

"மலர்மிசை ஏகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்"

"வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல"

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது"

"பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவனடி சேராதார்"

இவ்வைந்து திருக்குறள்களிலும் வரும் சேர்தல் என்னும் சொல்லிற்கு இடைவிடாது நினைத்தல் என்பது பொருளாகும்.

"இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்"

"வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உன்கழல் விடுவேனல்லேன்"

"பித்தொடு மயங்கியோர்பிணி வரினும்
அத்தா நின்னடி யல்லால் அரற்று தென்நா"

என ஞானசம்பந்தரும்,

"மற்றுப் பற்றெனக்கு இன்றி நின்திருப்
பாதமே மனம் பாவித்தேன்"

எனச் சுந்தரரும்,

"இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்
தாள் வாழ்க"

என மணிவாசகரும் இறைவனது திருவடியை இடையறாது நினைந்து உய்ந்தமை உய்த்துணரத் தக்கதாகும்.

இனி அத்திருவடியை இடையறாது வாழ்த்துதலும் வேண்டுமென்பதை,

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு"

என்னும் திருக்குறளால் விளக்குகின்றார். ஈண்டுப்புரிதல் என்பதற்கு எப்பொழுதும் சொல்லுதல் என்பது பொருளாகும். மணிவாசகப் பெருந்தகையார், "பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல் நாம் பேசும் போதெப்போது" என வினவி அருளுவதன் வாயிலாக இராப்பகலாக இறைவனுடைய புகழையே பேசவேண்டுமென்பதை வற்புறுத்திச் சொல்கின்றமை காண்க.

அப்பர் பெருமானும், இவ்வருமை நினைந்தே இறைவனது திருவடி தம் தலைமேல் சூட்டப்பெறுதலை வேண்டிப் பெற்றமையும், அவ்வேண்டுகோள் நிறை

வுற்றதும் "இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி நனைந்தனைய திருவடி என் தலைமேல் வைத்தார் நல்லூர் எம்பெருமானார் நல்லவாறே" என மகிழ்ந்து பாடியும் செய்த அருட்செயல் ஈண்டு நினைவு கூர்தற்குரியதாகும்.

இனி அத்திருவடிகளைக் கைதொழூஉப் பரவி காலுற வணங்கவும் வேண்டு மென்பதைக்,

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

என்னும் இரு திருக்குறள்களால் நன்கு விளக்குகின்றார் வள்ளுவப் பெருந் தகையார்.

"நீலமேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருந்தான் நிழற்கீழ்
மூவகையுலகமும் முகிழ்த்தன முறையே"

"தாமரை புரையுகாமர் சேவடி"

எனச் சங்கச் சான்றோரும்;

"திருவடியே சிவ மாவது தேரில்
திருவடியே சிவ லோகம் சிந்திக்கில்
திருவடியே செல் கதியது செப்பில்
திருவடியே தஞ்சம் உள்தெளி வார்க்கே"

"திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிவமலம் மீட்கும்
திருவடி ஞானமே இண் சித்தி முத்தியே"

எனத் திருமூலர் வழி வழியாக இறைவனது திருவடிப் பெருமையை நினைந்து அருளிச் செய்தமை திருவழிபாட்டை வற்புறுத்துவனவாகும்.

இங்ஙனம் மனம், மொழி, மெய் ஆகிய முக்காரணங்களாலும் இறைவனது திருவடியை நினைந்து வாழ்த்தியும் வணங்கியும், உய்வதுதான் உயிர்கள் செய்ய வேண்டிய கடமையாகும். பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பதற்கு இதுவே பெருந்துணையாகும்.

---

"உள்ளம் என்னும் பரந்த இடத்தை ஆசை என்னும் புயல் அலைக்கும் வரையில், அதில் இறைவனின் திவ்விய ஒளியைப் பார்ப்பதற்கு வாய்ப்பே உண்டாகாது; சாந்தி பெற்று இறைவன்பால் ஊன்றிய உள்ளத்தில்தான் கடவுளின் அற்புத ஆனந் தக் காட்சியைக் காணமுடியும்."

**ஸ்ரீ இராமகிருஷ்ணர்.**

# கோயிலுங் கூத்தனும்

**வித்துவான் வே. ஆறுமுகம் அவர்கள்**

புண்ணிய பூமியாகிய பரதகண்டம் பண்டுதொட்டுத் தெய்வீகச் சிறப்புடையது. பல மெஞ்ஞானிகளையும், மெஞ்ஞான நூல்களையும், சிறந்த புகழ் படைத்த திருக்கோயில்களையும் தன்னகத்தே கொண்டது. ஐவகைப் பூதங்களுக்குந் தனித்தனி திருக்கோயில்களைக் கொண்டு விளங்குவது. பல அற்புதங்கட்கிருப்பிடமானது அவ்வாறு புகழ் படைத்து விளங்கும் திருத்தலங்களுள் முதன்மைபெற்று விளங்குவது, தில்லைத் திருக்கோயில். இது ஐம்பூதங்களுள் ஆகாயதலம் எனப் பெயர்பெறும்.

தில்லையின் சிறப்பினை பேரின்பச் சார்பான கோவையாருக்கு உரைவகுத்த பேராசிரியர் ''திருவளர் தாமரை'' என்னும் செய்யுளுக்கு விளக்கம் கூறுமிடத்து 'ஐவகை நிலங்கட்குமுரிய பூக்களைக் கூறியதனால் பல நிலங்களிலுஞ் சென்று துய்க்கு மின்பமெல்லாம் தில்லைக்கண் வாழ்வார் ஆண்டிருந்தே அனுபவிப்பார் என்பது போதரும். போதர இம்மை இன்பத்திற்குத் தில்லையே காரணமென்பது கூறினர். ஆகவே, ஈசர் தில்லை என்றதினால் மறுமை இன்பத்திற்கும் காரணமாதல் சொல்லாமலே விளங்கும்.

பூக்களுள், தாமரைப்பூ சிறந்து விளங்குவதுபோலச் சிவபெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் திருகோயில்களெல்லாவற்றிலும் கோயில் என வழங்கும் தில்லைத் திருக்கோயில் மிக்க பழமையும் தெய்வீகத் தன்மையும் பொருந்தியது. வழிபட முத்தி சித்திக்கும் சிறப்புடையது. இக்கோயிலைப் புலியூர், பொன்னப்பலம், சிற்றம்பலம், தில்லைவனம், பூலோக கைலாயம் எனப் பல திருப்பெயர் கொண்டழைப்பர்.

இத்தில்லைத் தலத்தில் முதன்மை பெற்று விளங்குவது கூத்தர்பிரான் திருநடனக் கோலத்துடன் காட்சியளிக்குந் திருக்கோலம். இதனைச் சிற்சபை எனவும், சிற்றம்பலம் எனவும் அழைப்பர். இத்திருக்கோயில் பொன்னோடுகளால் வேயப்பெற்று ஒன்பது பெரிய தங்கக் கலசங்களைக் கொண்டு விளங்குகின்றது. கூத்தப்பெருமான் திருமஞ்சனம் கொண்டருளுவது கனகசபை. இச்சபை செப்போடுகளால் வேயப்பெறறு ஒன்பது பெரிய தங்கக் கலசங்களைக் கொண்டு விளங்குகின்றது. இச்சபையில்தான் ஒவ்வோர் நாளும் இரத்தினசபாபதி, படிகலிங்கம் ஆகிய திருவுருவங்கட்கு திருமுழுக்காட்டப்பெறும். அதற்குத் தெற்கே கொடிமரம். அதற்குத் தென்பால் விளங்குவது நிருத்தசபை. இங்கு இறைவன் ஒரு திருவடியைத் தூக்கித் திருமுடியின் மீது வைத்து நிருத்தமாடும் காட்சி உள்ளத்தை உருக்கும். சோமாஸ்கந்தர் முதலிய உற்சவ மூர்த்திகள் எழுந்தருளியிருக்குமிடம் தேவசபையெனப் பெயர் பெறும். இப்பேரம்பலத்தின் மேலும் தங்கக் கலசங்கள் விளங்காநிற்கும். இவைகளுக்கப்பால் மார்கழித் திருவாதிரை, ஆனி உத்தரம் என்னும் காலங்களில் தேர்த்திருவிழாவின் பின் கூத்தப்பெருமான் எழுந்தருளியிருந்து திருமுழுக்காடித் தரிசனம் கொடுத்தருளும் ஆயிரங்கால் மண்டபம் எனப் பெயர்பெறும் இராசசபையுமென ஐந்து சபைகளைக் கொண்டு விளங்காநிற்கும். இத்தில்லைத்திருக்கோயிலில் அமைந்துள்ள தீர்த்தங்கள் பரமானந்த கூபம், சிவகங்கை என்னுமிரண்டுமாம். இவையன்றி, தில்லை எல்லைக்குள் ஞானப் பிரகாசர் குளம், அனந்த தீர்த்தம், புலிமடு, திருப்பாற்கடல், இளமையாக்கினார் திருக்குளம் முதலாகப் பல தீர்த்தங்கள் உண்டு.

சிற்றம்பலத்தின்கண்ணே இத்திருக்கோயிலில் அருவத்திருமேனி, உருவத் திருமேனி, அருவுருவத்திருமேனி என்னும் மூவகைத் திருமேனிகளும் காட்சியளிக்கும். சிவாலயத்தில் சிவலிங்கத்திற்கு அடுத்த பெருமை கூத்தப்பிரானுக்கே. அங்கு கூத்தப்பெருமான் ஆனந்தத்திருக்கூத்தாடுகின்றான். இரத்தினசபாபதியாகிய மரகத நடராசமூர்த்தியும் உருவத்திருமேனிகளாம். படிகலிங்க மூர்த்தி அருவுருவத்திருமேனியாக விளங்குகின்றார். இவரை அழகிய சிற்றம்பலமுடையார் என வழங்குவர். கூத்தப்பெருமானின் வலதுபுறத்தில் சிதம்பர இரகசியம இருக்கிறது. அதில் மந்திர சொரூபமாகிய இரகசியம் இருக்கிறது. அதில் மந்திர சொரூபமாகிய திருவம்பலச் சக்கரம் இருக்கிறது. கூத்தப்பெருமானின் இடது புறத்தே உள்ளவாறே தரிசித்த ஆன்மாக்களுக்குப் பிறவித்துன்பத்தை இன்மை செய்யும் திருநடனத்தையுடைய கூத்தப்பிரானது (சபாநாயகரது) வரம்பிலின்பத்தை இனிதாக அனுபவிக்கும் அவரது இடப்பாகத்தை உடையவரும், கனக சபையிலே நிருத்த சாட்சியாய் நின்றருளுபவருமாகிய அழகையுடைய சிவகாமி அம்மையாரும், இடது பாகத்தே சுவர்ணகால வைரவரும் காட்சியளிக்கின்றனர். இங்கு கூத்தப்பிரான் திருவடிவம் ஐந்தெழுத்தின் வடிவமேயாகும். நகரம் — கால்களாகவும், மகரம் — வயிறாகவும், சிகரம் — தோள்களாகவும், வகரம் — முகமாகவும், யகரம — தலையாகவும், மந்திரம் — திருமேனியாகும். இதனையே மணிவாசகரும நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க, என்றருளினார்.

கூத்தப்பிரான் திருவுருவத்தைத் தரிசிப்போருக்கு அவ்வுருவத்திருக்குறிப்பு ''அப்பனே எப்போது வந்தாய்?'' ''யாது வேண்டும்?'' என்பது போலத் தோன்றாநிற்கும். அக்கூத்தனது வளைந்த புருவங்களும், கொவ்வைக்கனி போன்ற சிவந்த அழகிய உதட்டின் கண்ணே அரும்பு நகையும், கங்கை நதியைத் தாங்கிய திருச்சடையும், பவளம் போன்று விளங்குகின்ற திருமேனியின்கண் பால் போல் விளங்காநிற்கும் வெண்ணிற விபூதிப்பூச்சும் ஆன்மாக்களுக்குத் திருவருள் புரியும் குஞ்சிதபாதமும் நம் உள்ளத்தை உருக்குகின்றன.

பெரியபுராணம் பாடிய சேக்கிழார் சுவாமிகள் இப்பெருமானின் உருவமைப்பை 'உலகெலாமுணர்ந்து ஓதற்கரியன்' எனவும், 'நிலவுலாவியன்' எனவும், 'நீர்மலிவேணியன்' எனவும், 'அலகில் சோதியன்' எனவும், 'அம்பலத் தாடுவான' எனவும் போற்றி வணங்கினார். இன்னோரிடத்தில் அக்கூத்தப் பெருமானைக் 'கற்பனை கடந்த சோதி' எனவும், 'கருணையே உருவமாகி' எனவும் பலவாறு சொல்லித் துதிக்கின்றார். அலகில் சோதியன் என்பது கூததப்பிரான் திருவுருவமே. 'ஆதிமால் அயன் அறியொணாத அக்கினிப் பிழம்பாய் பேரொளியைக் கற்பனை கடந்த சோதி, என மணிவாசகப் பெருந்தகையார் தமது தேநூறு செஞ்சொற் திருக்கோவையாரில்,

> *''புரங்கடந்தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா*
> *திரங்கிடெந்தாய் என்றிரப்பத்தன் ஈரடிக் கென்னிரண்டு*
> *கரங்கடந்தானொன்று காட்ட மற்றாங்கதுங் காட்டிடென்று*
> *வரங்கிடந்தான் தில்லையம்பல முன்றிலம் மாயவனே.''*

தில்லைக்கூத்தன் திருக்கோயிலின் வலப்புறத்தே திருமாலின் திருக்கோயில் விளங்காநின்றது. இக்கோயிலின் கண் திருமால் படுத்த நிலையில் காட்சியளிக்கின்றார். இக்காட்சியை மணிவாசகர் திருமாலும், பிரமனும் அடிமுடி தேடிய வரலாற்றை நினைவு கூரச்செய்வதுடன் அடிதேடிச் சென்ற திருமால் காணமுடியாதிளைத்து தில்லைக்கூத்தனை அணுகித் தனது ஆற்றாமையைக் கூறி ஒரு திருவடியையாவது காட்டுமாறு மன்றாடுகின்றார். கருணையே உருவாகிய கூத்தப் பெருமான் ஒரு திருவடியைக் காட்டியருள, மற்றத்திருவடியையுங் காட்டுமாறு

இன்னும் வரங்கிடப்பதாகக் கூறுகின்றார். என்னே! இறைவன் கருணை. அயனும், அரியுமாகிய இருவர் அறியாத அடியை மூவாயிரவரந்தணர் வணங்கத் தில்லையம்பலத்துள் ஒளி வந்து நின்றவனெனத் தில்லைக்கூத்தனைப் போற்றித் துதிக்கின்றார் ஒரு பெரியார். அயனும், அரியும் அறியாமைக்குக் காரணம் ஆணவமுனைப்பினால் நெறியல்லா நெறியிற் சென்றமையாம். அன்னத்திற்குத் தாமரையும், பன்றிக்குக் காடுமாதலால் அதுவே நெறியாம். இவ்வாறு தேடாது தமது அகங்காரத்தினால் மாறுபடப் பன்றி தாமரையும், அன்னம் காடுமாகப் படர்ந்து தேடுதலால் கண்டிலர்.

கூத்தப்பிரான் தமது வலது கையிலுள்ள துடியை முழக்கி உலகைப் படைக்கின்றான். அவரது வலது கீழ்க் கையினால் காக்கின்றான். இடது மேற் கையில் கொண்ட அக்கினியால் ஆன்மாக்களைப் பிறப்பிறப்பினின்றும் இளைப் பாற்றுகின்றார். உயிர்களைத் தன்னிடமிருந்து மறைத்துப் பாசவலைப்படுத்தும் ஆணவமலமாகிய முயலகனைத் தனது திருவடியினால் அமுத்தி ஊன்றி அவன் வலிமையைத் தன் திருவருளால் குன்றச் செய்கின்றார். தூக்கிய திருவடியால் எல்லா உயிர்கட்கும் வீடுபேற்றை அருளுகின்றார். இவ்வாறு கூத்தப்பிரான் திருவுருவம் ஐந்தொழில் நிகழ்த்துவதாக அமைந்துள்ளது.

இக்கூத்தப் பிரானைப் பின்னொட்டியிருக்கும் திருவாசியானது ஏனைய திருவுருவங்களின் திருவாசியிலும் வேறுபட்டதுஞ் சிறந்ததுமாகும். இத்திருவாசி பிரணவம் எனப்படும் ஓங்காரமாகும். கூத்தப்பிரான் அவ்வோங்காரத்துள்ளிருக்கும் உள்ளொளி ஆகிய திருவைந்தெழுத்தாம். எனவே, கூத்தப்பிரானின் அமைப்பு சைவ சித்தாந்தக் கருத்துக்களை தன்னுள்ளே அடக்கி அவற்றின் அறிகுறியாக நிற்கின்றது என்பத நுணுகி ஆராய்வார்க்குப் புலனாகும்.

மூர்த்தி தலம் தீர்த்தம் என்று சொல்லப்படும் மூவகை விசேடங்களையும் ஒருங்கே பெற்றுள்ள இக்கோயிலைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர் 'எண்ணிய வெண்ணியாங் கெய்துவரென்பது மெஞ்ஞானிகள் கண்ட முடிபாம்.'

''வாழ்க சிற்றம்பலம்''

---

''சமயமானது வரவர அதிக முக்கியத்துவத்தைப் பெற்று இறுதியில் அதுவே உலக சித்திரத்தின் நடுநாயகமாவதைக் காலப்போக்கில நான் உணர்ந்துவருகிறேன். வாழ்க்கையின் மர்ம அறைக்குச் சமயமே திறவு கோலாக உள்ளது என்ற நம்பிக்கைக்கு நான் மீண்டிருக்கிறேன். ஆனால், இந்தத் திறவுகோல் எனது மூதாதையரது சமயத்திலேயே உள்ளது என்று கூறுவதை நான் ஏற்கவில்லை. ...............இந்திய சமயங்கள் இத்தகைய ஏகபோக உரிமையினைப் பாராட்டுவதில்லை. வாழ்வின் இரகசியப் புதிரை விடுவிக்க வல்ல வெவ்வேறான தீர்வுகளும், வழிகளும் உள்ளன என்பதை அவை அங்கீகரிக்கத் தயாராயிருக்கின்றன. உலகம் ஒரு குடும்பம் என்ற உணர்வினை நாம் கற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றோம். எம்மை நாமே அழியாமல், ஒரு குடும்பமாக வாழ வேண்டுமாயின், நேரிய உளப்பாங்கு கொண்ட இந்திய சமய உணர்வே சகல சமயங்களுக்கும் இரட்சிப்பு மார்க்கமாக அமைய வல்லதாகும்.''

— ஆர்னல்ட் ரொய்ன்பீ (Arnold Toynbee)

# திருமுறைச் செல்வம்

**திரு. க. கணபதிப்பிள்ளை அவர்கள் B. A.**

பன்னிரு திருமுறைகளும் சைவர்களுக்கு உயிரினும் மேலான ஊன்று கோல்களாகும். நாம் தமிழர்களாய்ச் சைவர்களாய்ப் பிறந்து வாழ்வாங்கு வாழவேண்டுமாயின், பன்னிரு திருமுறைகளிலும் பதினன்கு மெய்கண்ட சாத்திரங்களிலும் தோய்தல் வேண்டும்.

இன்று சைவராகப் பிறந்த பலர்க்குப் பன்னிரு திருமுறைகள் என்ருல் என்ன எனத் தெரியாதிருக்கின்றது. ஏதோ குறிப்பிட்ட சைவசீலர்க்கு உரியவை திருமுறைகள் என்ற எண்ணம் பரவலாக நிலவி வருகின்றது. ஒவ்வொரு சைவனும் திருமுறைகள் பன்னிரண்டையும் ஓதுதல் வேணடும்.

திருமுறைகளில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்பவற்றைப் பற்றி ஓரளவு சைவர் அறிவர். ஆனல், பத்தாம் திருமுறையும் தமிழ் ஆகமமுமாகிய திருமந்திரம் பற்றிப் பலர்க்கு ஒன்றுமே தெரியாது.

பதினேராந் திருமுறையிலே திருமுருகாற்றுப் படையும் இடம்பெற்றுள்ளது என்பதை முருகபத்தராயுள்ள சைவர்கட்கே தெரியாமலிருக்கின்றது. திருமுறைகளைத் தொகுத்த தமிழ் வியாசராகிய நம்பியாண்டார் நம்பி பற்றியோ அவர் திருஞானசம்பந்தர்க்கு அளித்த முக்கிய இடத்தாலேயே சமய குரவர்களிலே ஞானசம்பந்தர் முதலிடம் பெறுகின்ருர் என்பது பற்றியோ சைவர்கள் பலர்க்குத் தெரியாது.

பெயரளவிலாவது அருள்நூல்களையும் அவற்றை இயற்றியருளிய அருளாளர்களின் திருப்பெயர்களையும் அறிந்திருப்பது பெரும் புண்ணியச் செயலாகும். இதனினும் மேலானது பன்னிரு திருமுறைகளையும் ஓதியுணர்தல்.

வாழ்நாளில் ஒரு தடவையேனும் பன்னிரு திருமுறைகளையும் ஓதுபவர் மேலான புண்ணியவாளராவர். நாம வணங்கும் கடவுளராவர்.

திருமுறைகள் பன்னிரண்டையும் வைத்துப் பூசை செய்பவர்கள் மேலான சைவராவர், திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பிபற்றியும் தொகுப்பித்த இராசராச சோழ மகாராசா பற்றியும் கூறுந் திருநூல் உமாபதி சிவாசாரியார் அருளிய திருமுறைகண்ட புராணமாகும். பன்னிரண்டாந் திருமுறையாகிய சேக்கிழார் புராணம செய்தவரும் உமாபதி சிவாசாரியாராகும்.

பன்னிரு திருமுறைகளோடு மேற்கூறிய இருநூல்களும் துணைநூல்களாகக் கொள்ளத்தக்கவை.

திருமுறைகளைத் தொகுப்பித்த இராசராச சோழ மகாராசாவிற்கு ஆயிரம் ஆண்டு விழாக் கொண்டாடும் இவ்வேளையில் திருமுறைகளைத் தொகுப்பித்த நம்பியாண்டார் நம்பியைத் தமிழ் வியாசராக, சேக்கிழார் பெருமானுக்கொரு வழிகாட்டியாக, சமய குரவர்களிலே தலையானவர் ஞானசம்பந்தர் என்பதை நிலைநாட்டியவராக நாம் போற்றுதல் வேண்டும.

திருமுறை, சைவம், தமிழ் என்பவற்றைப் பொறுத்தவரை நாம் செய்யத் தக்க கடமைகள் பற்பல உள. அவற்றுள் ஒரு சிலவற்றையேனும் செய்வோமாயின், திருமுறை வழி திருவருள் வந்து நமமிற்படியும். திருவருள் நம்மிற படியப் படியத் தெய்வீகம் பிரகாசிக்கும். இன்னல்கள் யாவும் தொலையும. எந்நாளும் இன்பமேயன்றித் துன்பமில்லை எனும நிலை ஏற்படும்.

தெய்வீக நிலைக்கு எம்மை இட்டுச் செல்லும் திருமுறைகளைப் பாதுகாத்து, வணங்கி ஓதி வாழ்வது மேலான தொண்டாகும் என்பது மெய்ஞ்ஞானச் செல்வர் பலர்கண்ட முடிபாகும்.

# சமயமும் வாழ்க்கையும்

திரு. க. சின்னையா அவர்கள் B. A.

சமயம் என்பது ஒழுக்க நெறி. மனிதன் அறநெறியில் வாழ்ந்து நிறைவெய்தி ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்கு வேண்டிய நெறிகளை வழிப்படுத்துவது சமயத்தின் குறிக்கோளாகும்.

மனித வாழ்க்கை கலையும் கடமையும் கலந்தது. வாழ்க்கை வாழ்வாங்கு வாழ்வதற்கே என்பதன் மூலம் வாழ்வாங்கு வாழ்ந்து அமரவாழ்வெய்தலே வாழ்க்கையின் குறிக்கோள் எனச் சுட்டப்படுகிறது. வாழ்வாங்கு வாழவேண்டுமாயின், புன்னெறியிற் செல்லும் போக்கினை விலக்கி நன்னெறியிற் செலுத்தல் வேண்டும். குறிக்கோள் என்பது இலட்சியம். இலட்சியம் கானமுயலெய்த அம்புபோலன்றி யானை பிழைத்த வேலேந்தல் போல் உயர்வுடையதாக அமைய வேண்டுமென்பது வள்ளுவர் கருத்து. எனவே, உயர்ந்த இலட்சியம் ஆன்ம ஈடேற்றத்துக்கான வாழும் வழியை ஆற்றுப்படுத்தும் சமய நெறியில் ஒழுகும் சமய வாழ்க்கையேயாகும்.

சமயிகளெனத் தம்மைத் தாமே உயர்த்துவோரிற் பலர் சமய அறிவைப் பொறுத்த வரையில் குங்குமஞ் சுமந்த கழுதைகளாகவும், ஒழுகும் நெறியில் திருதராட்டிரர்களாகவும, சமய ஆய்வில் யானையை ஆய்ந்து பார்த்த குருடர்களாகவும் விளங்குகின்றனர். இவர்கள் சமய நெறி தெரியாது சமயத்தின் பேரால ஜனநாயக உலகில் கௌரவராக வாழ்ந்து பஞ்சவர்களை (புலன்களை) அடக்கியதாகத் திருப்தி கொள்வதை நினைக்குந்தோறும், நினைக்குந்தோறும் நெஞ்சம் புண்ணுகாதிருக்க முடியுமா ?

சமய வாழ்வுக்கு இன்றியமையாத அடிப்படை கடவுட் கொள்கை. கடவுள் உணர்வும் வழிபாடுந் தலைக்கொண்டு நினைவு, சொல், செயல்களை அறவழியில் நிறுத்தி மனம் விடுபட்டு ஒழுகுவதே சமயவாழ்வாகும். அறத்தின் தளம் தர்மம். தர்மதளத்திலிருந்து அறவழியை நோக்கி வாழ்க்கையைச் செலுத்துபவன் — அதனை இலட்சியமாகக் கொள்பவன் — பிறவாயாக்கைப் பெரும்பேறெய்துவான்.

சமயமே வாழ்க்கை. அது வாழ்வின் பல கூறுகளில் ஒன்றெனக் கொண்டு அதற்காகக் கால இடங்களை ஒதுக்குவது அறியாமை. முழுமையான இறைமார்க்கமாகிய சமயத்தில் வாழ்க்கை ஒருமைப்பாடடைய வேண்டும். சமயம் வாழ்வின் முழுமை என்ற அடியார்களின் அனுபவ உண்மைகளை மறுத்துப் புலனறிவை ஏற்பது அளவை நெறிக்கு மாறுனது.

கடவுட் கொள்கைக்கு நிலைக்களன் உயிரும் உடலுமுமாகும். உடலை இயக்கிக் கூடிநின்று தானும் இயங்குவது உயிர். உடம்போடு கூடி உறையும் மக்களுயிர்க்கு மனம் என்று ஒரு கருவியுண்டு. இக்கருவி உலகிலுள்ள பொருள்களை ஐம்பொறிகள் மூலம் பெற்றுத் தன்கண் ஒடுக்கிப் பின் பல்வேறு வகையில் வெளிக்காட்டும். இம்மனம் உலகில் வாழ்க்கை நடத்த உதவும் நுண்கருவி. மனதிலிருந்து வெளித்தோன்றும் எண்ணங்கள் வடிவுபெற உதவும் கருவி வாய். அவற்றைச் செயற்படுத்துவது உடம்பு. எனவே, தொழில்கள் யாவும் மனம்,

வாய், உடம்பு எனும் மூன்று கருவிகளையும் வாயிலாக உடையன. தொழில்கள் யாவும் தொண்டாக அமைய வேண்டும் என்பது கீதையின் போதனை.

> **“வாழ்த்தவாயும் நினைக்க மடநெஞ்சும்**
> **தாழ்த்தச் சென்னியும்”**

எனப் படைப்பின் நோக்கத்தை வெளிப்படுத்துகிறார் அப்பர் சுவாமிகள்.

நினைவு, சொல், செயல் மூன்றுக்கும் மூலமாயிருப்பது மனம். மனம் அடங்கினால் ஏற்படுவது அமைதி. மனத்தை அடக்குவது செயற்கை. மனம் அடங்குவது இயற்கை. செயற்கை நிலையற்றது; ஆனபடியால் அடக்கு, அடக்கு என்பது அறிவீனம். மனம் தானே அடங்க வாழ்க்கையை நெறிப்படுத்த வேண்டும். மனத்தை அடங்கவிடாது அலைப்பது ஆசை. ஆசை அறுமின்கள் என்றார் ஒரு பெரியார். ஆசையால் அலைப்புறும் மனம் அடங்குவது எப்படி? ஆசை அறவேண்டுமாயின் மருள் நீங்கவேண்டும். அதற்குப் புல்லறிவு நீங்கி நல்லறிவு தோன்ற வேண்டும். நல்லறிவைத் தருவன சமயப் பெரியார்களின் வாழ்க்கை அனுபவங்கள். திருமுறைகள், சமய சாத்திரங்கள் கூறுவன நல்லறிவுரைகளாம். புல்லறிவு நில்லாதனவற்றை நிலையினவென்றுணரச் செய்யும். மருள் பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும். மருள் நீங்க மெய்ப்பொருள் காணும் நெறியிற் புகவேண்டும். வாழ்க்கையில் அந்நெறிப்படுதற்கு மனத்துக்கண் மாசிலனாதல் வேண்டும். தர்மதளத்திலிருந்து மனமாசு கெட்டுச் செய்யுந் தொழிலில் ஆசை அறும். ஆசை விருப்பு; காமியம் எனினும் அஃதே. செய்யுந் தொழிலின் விளைவை நோக்குதல் விருப்பாம். விருப்பு வெறுப்பின்றிச் செய்யுந் தொழில் தொண்டாகும். தொண்டர்களெல்லாந் தம்செயலின்றி இறைவன் செயலாக, அவன் ஆணையாகத் தொழில் புரிந்தமையால் அது தொண்டாயிற்று. தொண்டர்தம் பெருமை சொல்லும் பெரிதே; தொழில் செய்வதைத் தொண்டாகக் கருதிச் செய்தால் ஆசை அறும்; மனமாசு நீங்கும்; சமதர்மம் நிலைக்கும்; மெய்ப்பொருள் வெளிக்கும்; மனம் அடங்கும்; ஐம்புலவேடரின் வெறியும் அடங்கும்; திருமூலர் உரைப்படி, “பார்ப்பான் பசுவைந்தும் பாலாய்ச் சொரியும்,” மேன்மைகொள் சைவநீதி விளங்கும்; வாழ்க்கை சமய வழிப்பட வாழ்பவன் சமயி ஆவான்.

எமது செயல்கள் யாவற்றிலும் விவேகந் தொழிற்படும். விவேகம் மனத்தளத்திலிருந்து மனம் அடங்கி ஒரு வழிப்பட்டபின் திட்டங்களைத் தீட்டும். அத்திட்டங்கள் காயத்தின் வழி கிரியைப்படும்போது — ஆற்றற்படுத்தும்போது — ஆக்கத்தில் ஆற்றுப்படுத்தும். அக உலகிலும் புற உலகிலும் விவேகமாகிய விஷ்ணு ஆக்கமாகிய பிரமாவுக்குத் தந்தை. விவேகத் திட்டந் தீட்டுவதோடு மட்டும் நின்று விடுவதில்லை. செயலுக்கு இடையிலும் புகுந்து தொழிற்படுவதால் ஆக்கம் உரனும் உறுதியும் பெறுகிறது. இவற்றிற்கெல்லாம் உயிர்ப்பைத் தந்து நீடு நிலைக்க உதவுவது இவற்றிற்கப்பாற்பட்ட ஒரு பொருள். அப்பொருளின் அடியையும் முடியையும் காணாமலே இவை அப்பொருளின் ஆணைக்குட்பட்டுத் தொழில் புரிகின்றன. இவற்றை உள்ளும் வெளியும் கடந்து நின்று இயக்கி, உயிர்ப்பை, ஜீவகளையைத் தந்து நிற்பது மெய்ப்பொருள். விவேகமும், உடம்புந் தந்தொழில் என இறுமாந்து செயல்புரிந்தால் தலைகால் தெரியாமல் தடுமாற நேரிடும். அவை தொழிலைத் தொண்டாகச் செய்வதாலேயே உலகு நீடுநிலைக்கிறது. அறிவு ஆராய்ச்சியிற் புகுந்தால் அழிவு ஏற்படும், அது தன் தொழிலென எண்ணுவதாலே. அன்பின் வழிச் சென்றால் ஆக்கம் பெறும்; தொண்டெனக்

கொள்வதாலே. ஆற்றலும் அப்படியே. எனவே, அறிவும் ஆற்றலும் அன்பின் வழிப்பட்டால் அமைதி நிலைக்கும். அன்பே சிவம்; அவன் அறவாழி; மெய்ப் பொருள்; உண்மை.

நம்பிக்கையும், நம்பிக்கையின்மையும் உண்மையை அடையும் பொருள்கள் ஆகா. நம்பிக்கை உளவியல் ரீதியாக ஒருவித திருப்தியையும், ஆறுதலையும் அளிக்குமேயன்றி உண்மையைக் கண்டடையும் பாதையின் படிக்கல் ஆகாது. நம்பிக்கை கொண்டே பிறரை மிரட்டியும், சுரண்டியும் புலி மனிதராகவும் எலி மனிதராகவும் வாழ்கின்றனர் பலர். ஆலயங்கட்டி அர்ச்சனை செய்து உருத்திராக்கப் பூனைகளாகின்றனர் சிலர். எவனொருவன் பிறரை ஏமாற்றுகிறானோ அவன் தன்னைத்தானே ஏமாற்றுகிறான். கண்மூடிப் பழக்க வழக்கமெல்லாம் நம்பிக்கையின் வழிப் பச்சோந்தி வடிவமெடுத்து மதத்தால், இனத்தால் பிரிந்து வேற்றுமையை ஏற்படுத்தி, நெறியின் பெயரால் வெறிகொண்டு வன்மையைப் புகுத்தி சமுதாயத்தையே அல்லோல கல்லோலப்படுத்துகின்றன. நம்பிக்கை மனத்தின் சலனம். காலஎல்லை நடந்த உண்மையைச் சாரின் மனம் தன்வச மிழக்க வேண்டும்; அதாவது, சலனமற்று எண்ணங்களினின்று விடுபடவேண்டும். அதுவே யொன்றுந் தன்மை. எண்ணங்கள் காலவரையறைக்குட்பட்டவை. கற்பனை மனதைக் கடந்தநிலை; உண்மை கற்பனை கடந்த சோதி. காலவரையறைக்குட்படாத உண்மையைக் காணின் காலவரையறைக்குட்பட்ட எண்ணங்களினின்று விடுபடவேண்டும். இந்தத் தெரிந்த நிலையினின்று மனம் விடுபட்ட நிலையில் ஏற்படுவது அமைதி. அமைதியைப் பலகாற் பயிற்சியாற் பெறலாமாயினும் அஃது இயற்கையாகாது. எண்ணம் நிறைவெய்தினால் திருப்தியும் ஆறுதலும் ஏற்படுகின்றன. எண்ணத்தின் செயற்பாட்டை முழுநிறைவாகப் புரியும்பொழுது ஏற்படும் முற்றுநிலை விடுதலை, அமைதிநிலை. அப்பொழுது அப்பாற்பட்ட உண்மைநிலை ஒன்று வெளிப்படுகிறது. எண்ணந்தொழிறபடாது, அறிவு, ஆராய்ச்சி, நினைவு யாவற்றையுங் கடந்து, முயற்சியற்ற இயற்கையான மன அமைதியில், உள்ளதை உள்ளபடி நோக்கும்பொழுது உண்மையான பேரானந்தம் ஏறபடுகிறது, மாறிக்காண்பது மனித மனம். அமைதி நிலையில் இந்நிலை இல்லையாம். இந்தப் பேரானந்த நிலையை அடைதலை இலட்சியமாகக் கொண்டொழுகுவது சமய வாழ்க்கையாகும்.

சமய வாழ்க்கைக்கு அன்பு பிரதானம். அன்பு பசைபோன்றது; பந்தஞ் செய்வது. அன்பு நெய்க்கு ஒரு வகையிற் சமானம். நெய் நெகிழ்ந்த நிலையில் எதையும் விடாது பற்றிக் கொள்ளும். உருகிப்பாயும் நிலையில் பந்தங்கள் யாவும் விடுபடும். அன்பும் நெகிழ்ந்து காதலாகிக் கசிந்து உருகி நிற்கும நிலையில பந்தங்கள் விடுபட்டுப் பேரானந்த நிலையை எய்தலாம். அன்பின் முதிர்ச்சி பக்தி; அன்பின் விரிவு அருள். அன்பின் நெறியாகிய சமயத்திலே வெறிகொண்ட சாதி எனுமம வியாதி புரையிட்டுச் சமுதாயத்தைப் பிரித்துப் பாழாக்கின்றது.

> *"யாதும் ஊரே யாவரும் கேளிர்"*
>
> *"எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணி யிரங்கவுநின்*
> *தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"*

என்பது நினைப்பு; ஆனால் நிலை வேறு.

இங்கே வாழாத நெஞ்சம் வாழ்கின்றது; வல்வினைப்பட் டாழ்கின்றது; கேடுசூழ்கின்றது. சைவர் ஐக்கியமாகச் சங்கமப்பட வேண்டுமானால், சாதி என்

னும் வியாதியை வேரோடு களைய வேண்டும். இறைவன் சந்நிதியில் சாதிபேதத் துக்கிடமிருக்குமாயின் பெற்ருன் சாம்பானும், திருநாளைப் போவானும் முத்தி பெறுவதெங்ஙனம்? "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ருர் வள்ளுவர். "சாதி குலப் பிறப்பென்னுஞ் சுழிபட்டுத் தடுமாறும் ஏதமலி நாயேன்" எனக் கண்டிக்கிருர் மணிவாசகர்.

"மண்ணிலே வந்த பிறவியே வாலிதாம் இன்பமாம்" என்று சுந்தரரும்; "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என நாவுக்கரசரும், 'அரிதரிது மானிடராதல் அரிது' என ஒளவையாரும் அனுபவித்து அனுபவத் திற் கூறிய இந்த மனிதப் பிறவியிலா ஜாதி எனும் வியாதி புரையோடிக்கொண் டிருப்பது? கடவுள் வணக்கத்துக்கு உணவேந்தும் வலது கையோடு மலசுத்தி செய்யும் இடது கையைச் சேர்க்கும் நாம் ஆலயதரிசனத்துக்கு மாத்திரம் வலது சாதியுடன் இடது சாதியைச் சேர்க்காதிருப்பது விந்தையாயிருக்கின்றது.

அன்பே தெய்வமான கருணைக் கடவுள் சந்நிதியில் பலியிடும் வழக்கம் பெரு விழாவாகக் கொண்டாடப்படுவது சமயக் கிரியையின் பெயராற் செய்யப் படும் மாபெரும் பாதகமாம். இப்படியான செயல்கள் பல இன்றும் நின்று நமது சமய வாழ்க்கையைத் தீட்டுப் படுத்துவதை ஒட்டவேண்டியது சமய நெறிப்படுத்துஞ் சான்ரேர்களின் கடனுகும் — தொண்டாகும்.

சமய வாழ்க்கைக்கு நம்மை வழிப்படுத்துவதற்கு வாழ்ந்து காட்டிய பெரி யோர்களும், அவர்தம் மணிமொழிகளும் எமக்கு நெறிப்படுத்தும் பாதைகளாக, படிக்கற்களாக விளங்குகின்றன. சமயப் பெரியார்களது அனுபவம் காண்பவ னுக்கும் காட்சிப் பொருளுக்கும் இடையிலுள்ள வேற்றுமையை அகற்றிவிடு கின்றது. மனிதன் மனிதனுக வாழ வேண்டுமெனில், அவன் மனம் போன போக்கெல்லாம் போகாது அடங்க வேண்டும். எனவே, மனதைக் கண்டிக்கிருர் மாணிக்கவாசகர்.

*"வாழ்கின்ருய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்*
*டாழ்கின்ருய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே*
*சூழ்கின்ருய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்*
*வீழ்கின்ருய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே"*

இவ்வண்ணம் மனதைக் கடிந்து, வாழும் வழியைத் திருவாசகம் முழுவதும் பரக்கப் பரவியிருக்கின்ருர். செயல்கள் யாவும் நோக்கமுடையன. இறைவன் படைப்பிலும் காரணம் உண்டு. படைத்தல் என்பது உள்ளதொன்றை வெளிப் படுத்தலாம். இந்த உடலைப் படைத்ததை நாவலர் கூறுமாறு கேட்டுத் தெளியலாம்.

*"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்."* — நாவலர் பெருமான்.

இதற்கான அன்ருட வாழ்க்கையிற் கடைப்பிடிக்க வேண்டிய சமய நெறியை நாவுக்கரசர்,

*"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா*
*நித்தலு மெம்பிரா னுடைய கோயில் புக்குப்*
*புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்*
*பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி*

தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல் சேர் செஞ்சடைஎம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறு நில்லே''

என எடுத்து இயம்புகின்றார்.

இப்படியாகச் சமயப் பெரியார் யாவரும் சமய வாழ்க்கை வாழ்ந்து தாம் நிறைவெய்தியதுமன்றி ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமும்'' என்ற கொள்கைப்படி தமது அனுபவ உண்மைகளைப் பின்வருவோருக்கும் எடுத்துக் காட்டிச் சென்றனர்.

சாதி இரண்டு. ஒன்று நீதிவழுவாநெறி முறையில் தம்மை இட்ட பெரியோர்; மற்றது நீதிவழுவாநெறி முறையில் தம்மை இடாத இழிகுலத்தோர். நீதி, பங்கயத்தயனும் மாலும் அறியாத மேன்மைகொள் சைவநீதி.

நீதி நெறியில் வாழ்தல் சமய வாழ்க்கை. சமய வாழ்க்கை ஒன்றே தனி மனிதனை உயர்வுபடுத்தி உய்விக்கும், சமுதாயத்தை பாத ஐக்கியப்படுத்தி உயர்வு படுத்தி உண்மை வழிப்படுத்தும்.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

---

## நல்லொழுக்கம்

''கடவுளும், புண்ணிய பாவமும், சுவர்க்க நரகமும், மறு பிறப்பும், முத்தியும் உண்டென்னும் உண்மையை ஒருபோதும் மறக்கலாகாது.

ஒருயிருக்கும் சிறிதாயினும் தீங்கு நினைக்கலாகாது. தனக்குத் துரோகஞ் செய்தவரிடத்தும் தான் துரோக சிந்தை இல்லாதவனாய் இருத்தல் வேண்டும்.

பிறருடைய பொருளைக் காஞ்சிரங்காய் போல நினைத்தல் வேண்டும். தனக்குப் பிறர் இலாபங் கருதாமற் செய்த நன்றியை மறக்கலாகாது.

வஞ்சனையை ஒழித்தல் வேண்டும். பகைவருஞ் சிநேகரும் அயலாருமாகிய மூன்று திறத்தாரிடத்தும் பக்ஷபாதமின்றிச் சமமாயிருத்தல் வேண்டும்.

காணாதவிடத்துப் பிறரை இகழ்ந்து பேசலாகாது ...... எந்நாளும் சத்தியம் பேசல் வேண்டும்.

குருவுக்கு வழிபாடு செய்யாது பெறும் வித்தை சித்தி பெறாது''

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

# தருமம்

பண்டிதர் ச. பொன்னுத்துரை

***மனத்துக்கண் மாசில னாத லனைத்தற***
***னாகுல நீர பிற.***

என்பது வள்ளுவர் வாக்கு. தருமத்தின் வரைவிலக்கணத்தைப் பலர் பலவாறு கூறினர். ஈதலறம் என்றார் ஒருவர். மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழித்தலும் அறம் என்றார் மற்றொருவர். வள்ளுவர் வாக்கு மிகத் தெளிவானது. மனத்தினின்றும் மாசு நீங்கவே வாக்குக் காயம் இரண்டிலும் மாசு ஒழிந்து விடும். பின்னைய இரண்டினும் மாத்திரம் மாசகன்ற வழியும் மனம் மாசு நீங்கி விட்டதெனக் கூறமுடியாது. அந்நிலையிலும் மனம் மாசுடையதாக இருக்கலாம். அதனையே 'ஆகுல நீரபிற' என்றார். இவ்வுண்மையை உணர்த்தவே 'மனத்துக்கண் மாசிலனாதல்' எனக் கூறப்பட்டது. எனவே, திரிகரணங்களும் மாசு அகன்று புனிதமான எண்ணமும் பேச்சும் செயலும் உடையனவாய் அமைவதே அறம் என்பது அவர் கருத்து. அவ்வழி அறச்செயல்கள் மிகப்பல; அவற்றுள் அன்பும் வாய்மையும் மிகச் சிறந்தவை. அன்பு உடையவன் பிறருக்குத் துன்பம் உண்டாக்கமாட்டான். வாக்குச் செயல்களினால் மட்டுமல்ல; மனத்தாலும் நினைக்கமாட்டான். 'நினைத்தலும் செய்தலோடொக்கு மாகலின்' என்ற பரிமேலழகர் வாக்கு ஈண்டு நோக்கத்தக்கது. பிறர் தமக்குத் தீமை செய்வதைக் கண்டவன் அவரை வெறுப்பதும், அது காரணமாக அவர்க்குத் துன்பம் விளைக்க எண்ணுவதும் இயல்பு. நமது கைவிரல் நமது கண்ணுக்குள் குத்திவிட்டால் அதை வெட்டி எறிகின்றோமா? இல்லை. நமது குழந்தை நமக்கு ஏதாவது பெரிய தீங்குகளை இழைத்துவிட்டால் அக்குழந்தையைத் தண்டனை செய்கிறோமா? இல்லை. சில சமயங்களில் அக்குழந்தையின் செயல்களைக்கண்டு நகையாடுகின்றோம். நமக்குத் துன்பம் செய்யும் எவரையும் இந்த நோக்கினால் நோக்குவோமாயின் உண்மையன்பும் அகிம்சையும் நிலைக்கும். நமது மனம் குரங்கு போன்றது; நிலைத்து நில்லாதது. அதனை நாம் நமது வசப்படுத்தினால் பெரும் பயன்களைப் பெறமுடியும். கட்டுக்கடங்காத யானையைக் கட்டுக்கடங்கி நடக்கச் செய்தால் அளப்பரும் நன்மைகளைப் பெறலாம். அநேக மனிதர் சேர்ந்து செய்யமுடியாத வேலைகளையும் அந்த யானை ஒன்றின்மூலம் செய்து முடித்துவிடலாம். மனத்தின் வல்லமையும் அப்படிப்பட்டது. மாயை என்கின்ற ஒரு மனமே இப்பிரபஞ்சத்தைக்கூடத் தோற்றுவித்திருக்கின்ற உண்மையையுணரின் மனத்தின் சக்தியை மட்டிடமுடியுமா? அகிம்சை, மனத்தை வசப்படுத்துவதற்கு ஏற்ற சிறந்ததோராயுதமாகும். சித்த விருத்தியையடக்குவதே அகிம்சையின் பிரதான அம்சம். அகிம்சா தருமத்தின் புனிதத் தன்மை பூரணப்படுத்தப்பட்டுவிட்டால் அவன் மாத்திரமல்லன்; அவனைச் சார்ந்த சகல பிராணிகளும் அதே மயமாகிவிடுவார்கள். எனவே, ஒருவன் தான் அன்புடன் இருப்பதால் தன்னைச் சார்ந்தவர்களையும் அன்புடையவனாகச் செய்கின்றவனாகின்றான். 'அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார் அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்' என்பது ஈண்டு கவனிக்கற்பாலது. இன்னா செய்தாரை ஒறுத்தலுக்கு வழிகூறும் வள்ளுவர், ஒறுத்தல் என்ற வழியினால் 'நன்னயம் செய்து விடல்' என்று கூறும் நயவுரை பாராட்டத்தக்கது. நன்னயம் செய்வது மாத்திரமன்று; அவற்றை மறந்து விடுதலே அன்புடைமைக்கு வழியாகும். இங்ஙனம் கூறினாலும் அகிம்சைக் கண்ணும் விதிவிலக்கு இருக்கிறது. துஷ்டர்களை யழித்து நாட்டைக் காப்பது அரசன் கடமை; அரசகடமையை ஏற்று துஷ்டர்களை யழிப்பது இம்சையெனப்படமாட்டாது. இங்ஙனம் நாட்டை வளமுறச் செய்தற்கான யாகாதி

கருமங்களைச் செய்கையில் துஷ்டநிக்கிரம் செய்வது இம்சையெனப்படமாட்டாது. ஒரு பெண்ணை இம்சிக்கும் ஒருவனைத் துன்பப்படுத்திக் கொன்றேனும் அவளது ஒழுக்கத்தைக் காப்பது இம்சையாகாது. இவையெல்லாம் புறனடைவகையா னமைந்த அறமெனப்படுவனவேயாம்.

வாய்மையும் இத்தகையது. உள்ளதை உள்ளதாகவும் இல்லதை இல்லதாகவும் கூறுதல் உண்மைக்கோரிலக்கணம். வள்ளுவர் இதனை 'யாதொன்றும் தீமையிலாத சொலல்' என நயமாகக் கூறுகின்றார். இவ்விடத்திலும் மனமொன்றாக, வாக்குப் பிறிதொன்றாக அமையுமானால் தீமையில்லாததெனினும் வாய்மையாகமாட்டாது. மனமும் வாக்கும் ஒன்றுபட்டால் மட்டும் வாய்மை வந்துவிடாது. நமது அயல் வீட்டில் ஒருவன் இருக்கிறான் என வைத்துக்கொள்வோம். அவன் திருட்டுக்காரன்; அதைவிடப் பெரிய குடிகாரன்; ஏமாற்றிப் பணம் பறிக்கும் பாதகன்; எந்தத் தீமையுஞ் செய்வதற்கு எள்ளளவும் அஞ்சாதவன்; இவனைப் பார்த்து அயல் வீட்டார் கொதித்து எழுந்தார்கள். கண்டவர்களுக்கெல்லாம் இவனது தவறுகளைச் சொல்லாமல் இருக்க அவர்களால் முடியவில்லை. இவனது குறைகளை ஓயாமல் பேசிக்கொண்டே வந்தார்கள். இப்படிப் பேசுவதனால் மனத்தை ஓரளவு ஆறுதலாக்கிக் கொண்டார்கள். இவர்கள் வீட்டுக்கு வந்தவர்களுக்கெல்லாம் இவனைப்பற்றிப் பேசியதில் தவறுகள் எவையும் இருக்கவில்லை. அதைவிட இவர்களது மனம் வாக்கு இரண்டும் இப்பேச்சில் ஒன்றுபட்டேயிருந்தன. அதனால் இது வாய்மையாகிவிட முடியுமா? முடியாது. அவனது குறைகளை எப்போதும் பேசித் திரிவதால் பேசுபவர்கள் அடையும் பயனும் ஒன்றுமில்லை. கேட்பவர்கள் அடையும் பயனும் ஒன்றுமில்லை. தவறு செய்பவனும் அடையும் பயன் ஒன்றுமில்லை. ஆகவே, இவ்வர்த்தமற்ற வார்த்தைகள் மனமும் வாக்கும் ஒன்று பட்டனவாக அமைந்தபோதிலும் வாய்மை என்று சொல்லிவிட முடியாது. ஒருவன் தன்மனத்தில் எழுகின்ற தீய எண்ணங்களை வாக்கினில் வெளிவிடுவதனால் அவனைச் சத்தியந்தன் எனச் சொல்லலாமா? இல்லை. ஆகவே, நல்ல மனத்திலே தோன்றுகின்ற நல்ல எண்ணங்களை வாக்கில் சொல்வதே வாய்மை என்றாகின்றது. புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின் பொய்மையும் வாய்மையிடத்த என்பதில் புரைதீர்ந்த என்பது இக்கருத்தை வலியுறுத்துதல் காண்க. உடன்கட்டையேற விருப்பமில்லாத ஒருத்தியை வலிந்து துன்புறுத்தி, உடன்கட்டையேறச் செய்ய முனைந்தவர்களை நோக்கி, உண்மையில்லாத ஒரு ஆணையை அரசனது ஆணையெனப் பொய்மை கூறி, அவளைத் துன்பத்திலிருந்து விலக்கியதை வாய்மையின் வாய்ப்படுத்திக் களவியலுரைகாரர் கூறிய கருத்து இவ்விடத்திற்குப் பொருத்தமானது. சத்தியம் அகிம்சையை அடிப்படையாகக் கொண்டது. உள்ளது தானும் பிறருக்குத் தீங்கு தருமானால் அது வாய்மையின்பாற்படாது. இல்லாதது தானும் பிறருக்குப் புரைதீர்ந்த நன்மை பயக்குமாயின் வாய்மை எனப்படும்.

வாய்மை ஒன்றே மேலான அறமென்பது 'அறம் பிறசெய்யாமை நன்று' என வள்ளுவர் கூறியதனால் பெறப்படும். எல்லா அறத்தின் பயனையும் வாய்மையே தந்துவிடும் என்பதனால் வாய்மையின் சிறப்பு உணரக்கூடும்.

அன்பு அகிம்சை வாய்மை என்பவை சிறந்த தருமங்கள் என்பதும் அவற்றின் உண்மைக் கருத்துக்கள் இவையிவை என்பதும் இங்கு கூறப்பட்டுள்ளன.

# இலக்கிய இன்பம்

திருமதி S. சிவநாராயணமூர்த்தி B. A. (Lond.), Dip. in Ed. (Cey.)

காலம் என்னும் கண்ணுடி உலக மக்களிடையே உறவாடி — விளையாடி எத்தனையோ புலவர்களை இத்தமிழ் கூறும் நல் உலகிற்கு வற்ருது வரையாது வழங்கியுள்ளது. காலத்துக்குக் காலம் புலவர்களின் கற்பனையின் பயனுகக் கிடைத்தவைதான் இலக்கியங்கள். இலக்கியம் என்னும் சொல் இலட்சியம் எனனும சொல்லின் திரிபு ஆகும். இலட்சியம் எனும் சொல் நோக்கம் என்பதைக் குறிக்கிறது. எனவே, தமிழில் எழும் சகல இலக்கியங்களும் ஒரு நோக்கத்தின் பயனுகவே எழுகின்றன. அதனுற்ருன் தமிழில் எழும் சகல இலக்கியங்களும் பொதுப்படையாக ''இலக்கியங்கள்'' என அழைக்கப்படுகின்றது. இலக்கியங்கள் மனித வர்க்கத்தின் நல்வாழ்விற்கு உதவக்கூடிய உயர்ந்த நோக்கங்களை அள்ளி வழங்கும் நீரூற்றுக்களாக விளங்குகின்றன. கடவுள் — அன்பு — அறம் — ஒழுக்கம் என்பனவற்றின் சிறப்புக்கள் கவிதை வடிவாகவே அமைந்து வருகின்றன. மக்கள், செய்யுள்களாக அமைந்த இலக்கியங்களைப் படித்து இன்பம் காணுகிருர்கள்.

இன்பத்தை நாடுவது உயிர்களின் இயற்கை. இன்பக் காட்சிகளைக் காண்பது கண்களிற்கு இன்பம். இனிய ஒலிகளைக் கேட்பது காதுக்கு இன்பம். சுவையுள்ள பொருள்களை உண்பது நாவிற்கின்பம். சுகந்த மணங்களை நுகர்வது மூக்கிற்கின்பம். இத்தகைய இன்பங்களையே வள்ளுவரும் ''கண்டு — கேட்டு — உண்டு — உயிர்த்து உற்று அறியும் ஐம்புலன்'' என மொழிந்தார். இத்தகைய இன்பங்களில் எல்லாம் சிறந்தது இலக்கிய இன்பம். இவ்வின்பம் சுவைக்கச் சுவைக்கக் குன்ருது இன்பம் பயக்கும்.

பழைய கால இலக்கியங்கள் கடின பதங்களடங்கிய பாட்டுக்களாக — எளிதில் புரிந்துகொள்ள முடியாதவையாக விளங்குகின்றன. ஆனுல், இக்கால இலக்கியங்கள் பாமரமக்கள் படித்தவுடன் புரியக்கூடிய இலக்கிங்களாக விளங்குகின்றன. 'பழமையின் தொடர்ச்சிதான் புதுமை' எனும் நோக்குடன் இருவகை இலக்கியங்களையும் ஆராய்ந்தால் பல உண்மைகள் விளங்கும். இன்பமும் பயக்கும்.

இப்போது பயனற்றனவாகத் தோன்றுகின்ற பழைய பாடல்கள் சிற்சில இன்பம் பயக்கக்கூடியனவாய் இருக்கின்றன. இப்பாட்டுக்கள் சொல்லடுக்கின் அழகுக்காகவும், படிப்போர் பதங்களைப் பிரித்துச் சிந்தனை செய்து பொருள் கண்டுபிடிக்க வேண்டும் என்ற நோக்குடனுமே இயற்றப்பட்டுள்ளன. மேலும், 'சந்தி', 'விகாரம்' முதலிய சலுகைகளைக் கொண்டு பதங்களைப் பின்னிக் காட்டும் திறமையும் அடங்கியுள்ளது.

நல்ல கருத்துக்களையும் — கவிபுனையும் கலைக்காக வேண்டுமென்று மறைத்துச் சொல்லுகின்ற சில பாடல்களை மட்டும் உதாரணமாக எடுத்துக் கொள்வோம்.

''அஞ்சிலே ஒன்று பெற்ருன்
அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்று ஆருக
ஆரியர்க் காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற
அணங்கைக் கொண்டு அயலார்ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான்
அவன் நம்மை அளித்துக் காப்பான்.''

இப்பாட்டை நாம் கண்டோ கேட்டோ இருக்கலாம். இதை முன்னு லேயே அறிந்தவர்களைத் தவிர மற்றவர்கள் இலகுவில் பொருள் சொல்ல முடி யாது. இப்பாடல் கம்பராமாயணத்தில் வரும் தோத்திரப் பாடல்களில் ஒன்று. இப்பாட்டில் நல்ல அர்த்தம். சுலபமாக விளங்கமுடியாது. இதை விரித்துரைக் கும்போது ஒருவிதக் கவிதைக் ''கலையின்பம்'' காணப்படுகின்றது.

இப்பாடல் அனுமானின் செயல்களைக் குறிக்கின்றது. ''வாயுபகவானின் புத்திரனாகிய அனுமான் ஆகாச மார்க்கமாகிக் கடலைத் தாண்டி, பூமாதேவியின் மகளாகிய சீதையைக் கண்டு, (பேசி — கணையாழியைக் கொடுத்து — சூடாமணி யை வாங்கிக்கொண்டு) இலங்கைக்கு நெருப்பு வைத்துவிட்டு வந்தவன். அவன் நம்மைப் பாதுகாத்து ரட்சிப்பவன்'' என்பது கருத்தாகும். இப்பாடலை விளங் கும்போது கவியின் கலைத்திறமும் — ஒருவித இன்பச் சுவையும் ஏற்படுகின்றது.

மேலும் இலக்கிய இன்பம் காண்பதற்கு ஒரு சிறு உதாரணம்: ஓர் ஆட வன் ஓர் இளங்கன்னிகையைத் தனியே சந்திக்கிறுன். அவளுடைய அழகைப் பல வாறு புகழ்கிறுன். அவர்களின் சம்பாஷணைக்குப்பின் ஒரு கட்டத்தில்,

> ''காலாயுதக் கொடியோன்
> கைலாயுத வழியே
> மாலாயுதம் ஈன்ற
> மாமணியைத் தானுதிர்த்தாள்.''

என்று கவி பாடுகின்றுர்.

இப்பாட்டிற்குச் சாதாரண மக்கள் இலகுவில் பொருள் கண்டுபிடிக்க முடி யாது. படித்தவர்கள் கூடப் பாடுபட்டுத்தான் பொருள் தேடவேண்டும்.

இப்பாடலில் ''வேல்போன்ற அவள் விழிகளில் இருந்து முத்துமுத்தாகக் கண்ணீரை உகுத்தாள்'' எனக் கூறப்பட்டுள்ளது. ஒரு சொல்லிலே கூறினுல் ''அழுதாள்'' என்பது பொருளாகும். இப்படி நீட்டிச் சொல்வதால் உலக வாழ் வுக்கு என்ன நன்மையென்ற கேள்வி ஒரு புறம் எழுந்தாலும் — இப்பாடலில் ஒருவித கலையின்பம் படிப்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றது.

மேலும், பழங்கால இலக்கியங்களிற் சித்தர்கள் பாடிய பாடல்கள் இன்பச் சுவையை அள்ளி வழங்குகின்றனவாயுள்ளன. சித்தர்களுட் குதம்பைச் சித்தர் பாடிய ஒரு பாடலை நோக்கின்,

> ''தாவாரம் இல்லைதனக்கு ஒருவீடில்லை
> தேவாரம் ஏதுக்கடி — குதம்பாய்
> தேவாரம் ஏதுக்கடி ?''

இதில் திறமையான கருத்து அமைந்துள்ளது. வீடுவாசல் இல்லாதவனுக்கு பக்திப்பாடல்களால் பயனில்லையென இப்பாடலைப் படிப்போர் கூறுவார். ஆனுல், சிந்தனை செய்தால்,

''பெண்ணே பிறர் துன்பம் கண்டு மனமிரங்கி — அதில் தானும் பங்கு கொண்டு கருணை காட்டாது; தன்னலப் பற்றுடனும் — அகந்தையுடனும் தேவா ரம் படிப்பதில் பயனில்லையாகும்'' என்பதே கருத்து.

எனவே, இப்பாட்டிலும் பொருள் இலகுவாக விளங்கமுடியாத வகையிலே புலவர் புனைந்துள்ளார்.

இத்தகைய சிறிய இலக்கியங்களை விடப் பெருங்காப்பியங்களில் இலக்கியச் சுவை அதிகமாகக் காணப்படுகின்றது. பெருங்காப்பியங்களில் புலவர்கள் உவமான உவமேயச் சிறப்புக்களிலும் கற்பனையின் மேன்மையிலும், ஒரு குறிப்பிட்ட கருத்தை ஒரு தரம் சொன்னபின், அதற்குடன்பாடில்லாத பல்வேறு விடயங்களைக் கூறிவிட்டு மீண்டும் அதே கருத்தைக் குறிப்பிடவேண்டிய சமயம் வரும் போதெல்லாம், முன்கூறிய தொடர்பு விடாமல் பதங்களைக் கையாளும் திறமையிலும் ''இலக்கிய இன்பம்'' பயக்கவென்றே நயங்களை அமைக்கிறார்கள்.

ஆயிரக்கணக்கான கவிகளைப் பாடும்போது ஒரு பாட்டிற் கூறிய உவமானத்தின் தொடர்பைப் பல பாடல்களுக்கப்பாலும் விடாமல் அமைக்கின்ற கலைத் திறம் மிகவும் ''இலக்கிய இன்பம்'' பயப்பதாகும். அதில் ஞாபகசக்தி மட்டுமல்லக் கலையழகும் கலந்திருக்கும்போது ''இலக்கிய இன்பம்'' அதிகப்படுகின்றது.

இலக்கிய இன்பத்தை அனுபவிப்பதற்கு கவிஞன் அமைக்கும் அழகுகளை ஆராய்ந்து படிக்கும் ஆர்வம் வேண்டும். அவகாசமும் வேண்டும்.

காப்பியங்களில் கம்பராமயணத்தை எடுத்துக் கொண்டால் —

கம்பராமாயணம் ஓர் இலக்கியச்சோலை. மலர்கள்மூலம் மக்கள் பல இன்பத்தையடைகிறார்கள். அதே போலக் கம்பராமாயணம் மூலம் அவையுடன் அறிவையும் பல வழிகளாகப் பெறக்கூடியதாக உள்ளது. தேன் சொல்லியா வண்டு சுவைபார்ப்பது? அதுபோலக் கம்பராமாயணம் சொல்லியா மக்கள் அதை ஆராய்வது. மக்கள் இவ்விலக்கியத்தைச் சிந்தித்து ஆராயப் பலவிதமான இன்பங்கள் — அறிவுகள் புலனாகும்.

கம்பன் பல இடங்களிலே தனது கவித்திறனை — கற்பனை முத்துக்களைப் பரப்பியுள்ளான். கம்பராமாயணத்தில் இராமன் பிறக்குமுன்னே தசரதனின் நிலையைக் கூறப் புகுந்த கம்பர்,

> **வயிரவாள் பூணணி**
> **மடங்கல் மொய்ம்பினன்**
> **உயிரெல்லாம் தன்னுயிர்**
> **ஒப்ப ஓம்பலால்**
> **செயிரிலா உலகினில்**
> **சென்று நின்றுவாழ்**
> **உயிரெல்லாம் உறைவதோர்**
> **உடல் ஆயினன்.**

தசரதன் எல்லா உயிர்களையும் தன்னுயிரைப்போல் பாவித்தான் என்பது கூறப்பட்டுள்ளது.

இராமன் பிறந்தபின்,

> **காவியும் ஒளிர்தரு**
> **கமலமும் எனவே**
> **ஓவிய எழிலுடை**
> **ஒருவனை அலதோர்**
> **ஆவியும் உடலும்**
> **இலதென அருளின்**
> **மேவினன் உலகுடை**
> **வேந்தர்தம் வேந்தன்.**

இராமனைத் தவிர வேறு உயிரோ உடலோ இல்லாதவனாகத் தசரதன் மகிழ்ச்சியில் மூழ்கினான் எனக் கம்பர் பாடுகிறார். மேலும், சித்திரத்தில் தீட்டிய நீலோற்பலமும் ஒளிமிகுந்த தாமரையும் போன்ற அழகுள்ளவனாகிய இராமன் என்கிறார். தசரதன் இராமனை உயிராக நினைப்பதைக் கம்பர் அழகுபெறப் பாடியுள்ளார். மேலும் இராமன் பிறக்குமுன் இருந்தநிலையிலிருந்து உணர்ச்சி மேலீட்டால் மாறிவிடுகிறான். ஆகா! எத்தகை இன்பத்தைக் குவித்து வைத்துள்ளான்.

மேலும், தசரதன் விசுவாமித்திரரிடம் இராமனையும் இலக்குவனனையும் ஒப்படைத்துவிட்டுத் தசரதனின் நிலையைக் கம்பர் காட்டுகிறார்.

"அன்ன தம்பியும்
தானும் ஐயனும்
மன்னன் இன்னுயிர்
வழிக் கொண்டாலென
சொன்ன மாதவற்
றொடர்ந்த சாயைபோல
பொன்னின் மாநகர்ப்
புரிசை நீங்கினர்"

விசுவாமித்திரருடன் இருவரும் சென்றபின் தசரதனின் உயிரே விட்டுப் போனதைப்போல் இருந்தது என்கிறார். பின், "எதிர்கோள்" படலத்தின் இருபத்திரண்டாவது பாட்டில் தசரதன் உயிர் வந்தவனாய் மகிழ்வதைக் காட்டுகிறார். சீதை — ராமன் திருமணத்திற்குத் தசரதன் வருகிறான். ஜனகன் — இராமன் எதிர் கொள்கின்றனர். தசரதனை இராமன் அணுகுகிறான்.

"காவியும் குவளையும்
கடிகொள் காயாவும் ஒத்து
ஓவியம் சுவைகெடப்
பொலிவதோர் உருவோடே
தேவரும் தொழுகழல்
சிறுவன்முன் பிரிவதோர்
ஆவி வந்தென்னவந்து
அரசன்மாரு அணுகினான்."

மேற்கூறிய இரண்டு பாடலுள்ளும் 79-ம் பாடல்கள் இடையிலுள்ளன. எவ்வளவு கவிவண்மை கம்பனுக்கு. இன்பசிருங்காரம் எவ்வளவு, அளவிடமுடியாதே. மேலும், இப்பாடலில் உள்ள சொற்களைக் கவனித்தால் இலக்கியச் சுவை இருமடங்காகும். இப்பாட்டின் பொருள் யாதெனில்,

"இராமனாகிய உயிர் மீண்டும் வந்து தசரதனாகிய உடலிற் சேர்ந்துகொண்டது" என்பதாகும். இச்சிறிய வாக்கியத்தை இத்தகைய அழகுச் சொற்களால் கம்பன் கவிதையாகப் புனைந்துள்ளான். படிப்போர் உள்ளம் உவகை கொண்டு இன்பம் பயக்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

மேலும், கம்பன் தனது இலக்கியத்திலே "ஏனையவரங்கள் இரண்டினால் ....." நாகமென்னும் கொடியாள்......, நிகைத்ததும் இல்லை......, சேணுலாவிய நாளெல்லாம் முதலிய பாடல்கள் மூலம் இலக்கியச் சுவையை எடுத்து விளக்குகிறான்.

இதைவிடப் பக்தி இலக்கியங்களிலும் இன்பம் பயக்கும் இனிய பாடல்கள் விளங்குகின்றன. இறைவனை கண்ணீர் உருகி மெய்சோரப்பாடும் பாடல்களிலும் ஒருவகை இன்பம் உண்டு.

ஏன், புராணக் கதைகளிலும் (இலக்கியங்கள்) இன்பப் பாடல்கள் நிறைய உண்டு. சேக்கிழாரின் பெரிய புராணத்தை எடுத்துக் கொண்டால் அதில்வரும் பாடல்கள் மிகவும் சிறந்த இன்பம் பயப்பனவாக உள்ளன. அதிலுள்ள நாட்டு நகர வருணனைகள் மிகவும் திறம்பட அமைந்துள்ளது. திருத்தொண்டர் புராணத்தில் பாலியாற்றின் பெருமையை விளக்கும்.

*"பிள்ளை கைவரப் பெருகுபால்*
*சொரி முலை மள்ளர் வருட......"*

என வரும் பாடல் படிப்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்வனவாக விளங்குகின்றது. இதே மாதிரி இலக்கியங்களில் புலவர்களின் கவித்திறனால் மக்கள் இலக்கியச் சுவையை அநுபவிக்கக் கூடியதாக உள்ளது.

ஜகதீச சந்திரபோஸ் 1925-ம் ஆண்டு லண்டனில் இந்திய ஆபீசில் அநேக ஐரோப்பிய 'ஸயன்டிஸ்ட்' (இயற்கைச் சாஸ்திர நிபுணர்கள்) மத்தியில் செடி-கொடி-மரங்களிற்கும் உயிர் உண்டு; உணர்ச்சி உண்டு என நிரூபித்தார்.

"Friends! Men and other animals are only moving plants and trees; plants and trees are only stationary animals."

நண்பர்களே! மனிதர்களும் — பிராணிகளும் இடம்விட்டு இடஞ்சென்று வாழுகின்ற செடிகொடிகள்தாம். செடிகொடிகள் — மரங்கள் நடமாட்டம் இல்லாமல் ஒரே இடத்தில் நின்று வாழக்கூடிய பிராணிகள்தாம். இதிலும் இலக்கிய இன்பம் உண்டு. கம்பனின் கூற்றை ஒத்துள்ளது.

---

இவ்வுலகம் கோழைகட்கன்று. ஓட முயலாதே. வெற்றியையோ தோல்வியையோ கோராதே.

*　　*　　*

எழுந்திருங்கள், உழையுங்கள் — இவ்வாழ்வு எத்தனை நாள்? இவ்வுலகில் தோன்றினீரன்றோ? ஆதலின் அதற்கு அறிகுறியாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். அவ்வாறு செய்யாவிடில், உங்கட்கும் மரங்கள், கற்கட்கும் யாது வேறுபாடு? அவையும் தோன்றுகின்றன, கெடுகின்றன, இறக்கின்றன.

*　　*　　*

உலகிற்கு நன்மை செய்ய நமக்கு இயலுமா? பாரமார்த்திக முறைப்படி இயலாது. வியாவகாரிக முறைப்படி இயலும்.

— **விவேகாநந்தர்**

# தியாகத்தின் பேரொளி

**செல்வி புஷ்பா செல்வநாயகம் B. Sc.**

நம் முன்னே வானளாவி எழுந்து நிற்கும் கம்பராமாயணம் எனும் மனோகரமான காவியப் பெருங்கோவிலில் புகுந்துவிட்டால் வேறு உலக ஸ்மரணையே இன்றி அங்கு காட்சி வழங்கும் அற்புதமான காவியச் சிற்பங்களான உயிரோவியங்களை மெய்மறந்து தரிசித்து வியந்து நின்றுவிடுவோம். அந்த ஆலயத்தின் எழுநிலைமாடங்களாக இராமன், இலக்குவன், இராவணன், பரதன், சீதை போன்றவர்கள் ஒளிவிட்டுப் பிரகாசித்தபோதும் அந்த ரம்மியமான உயிரோவியங்களோடு ஒப்பிட்டு நோக்கும்போது சின்னஞ்சிறு சிற்பமாக, கவிஞனது கலைத்திறன் அத்தனையையும் கொண்டு உருவகிக்கப்பெற்று நம்முன்னே பண்பின் உறைவிடமாகத் தோன்றும் சுமித்திரை எனும் கவின் சொட்டும் தந்தச் சிலை அற்புதமான ஒரு சிலையே என்பதை எவரும் மறுக்கமுடியாது. அந்த உன்னதமான படைப்பினைப் பற்றி ஆசிரியர் புனைந்தேத்திய பாமாலைகள் மிகச்சிலவேயெனினும் அவற்றின் துணைகொண்டு நாம் நோக்குவோமாயின், இந்த உயரிய காவியச் சிருஷ்டி நுண்ணிய பல குணநலன்களைப் பூண்டு, தனக்கே உரித்தான அடக்கமெனும் அணி புனைந்து, மேலே கூறிய உயரிய மாடங்களுக்கு ஒப்பாக இலங்குவதைக் காணலாம்.

வால்மீகி முனிவர் தமது ராமாயணத்தில் சுமித்திரையைத் தசரதனது இரண்டாம் மனைவி என அறிமுகம் செய்கிறார். ஆனால், கம்பநாடனோ அவளை 'இளைய மென் கொடி' என்ற அடைமொழிகளால் விளித்துத் தசரதனது மூன்றாவது பத்தினியே அவள் என்ற தகைமையை வழங்கி, வால்மீகி தசரதன் தனது மூன்றாவது மனைவியான கைகேயியின் மையலில் சிக்கிய 'காமப் பரவசன்' ஆகையால் அவள் சொற்படி மூத்தாள் பயந்தெடுத்த அருமந்த மைந்தனை இராமனைக் காட்டுக்குப் போக்கினான் என்ற இழிவை நீக்கிக் கதையின் போக்கையும் தசரதனது இயல்பையும் புது மெருகு கொடுத்து மாற்றியமைத்து விடுகிறார். கம்பனது கூற்றின்படி சுமித்திரையே தசரதனது இளையமனைவி என்பதை நிரூபிப்பதற்கு யாகசாலையில் முதன்முதல் சுமித்திரை நமக்குத் தோற்றம் கொடுத்தபோது வயதில் இளையவளான அவளுக்கு, அவியுணவை மற்ற இரு மனைவிகளுக்கும் வழங்கியபோது ஒருதடவை கொடுத்தானென்றும், பின்பு அந்த அவியுணவு சிறிது மிஞ்சிருந்ததால் மிஞ்சியதை மீண்டும் இளையவளாகிய சுமித்திரைக்குக் கொடுக்க அதை அருந்தியதாற்றான் அவள் இரு மக்களை ஈந்தாள் என்றும் கூறி உறுதிப்படுத்துகிறார். மன்னனது அன்பு முழுவதையும் கவர்ந்த காதல் மனைவி கைகேயியேயெனினும் அவியுணவைப் பகிர்ந்து கொடுக்கும்போது வயதில் இளையவள் என்ற ஒரே காரணத்துக்காக சுமித்திரைக்கு எஞ்சிய அவியுணவை மீண்டும் தசரதன் கொடுத்தான் என அழுத்தம் திருத்தமாகக் கவிஞன் வர்ணிக்கிறான். அதுமட்டுமல்ல, பல தடவைகளில் பலரது கூற்றுமூலமாகத் தசரதன் வாய்மையையே காப்பவன் என்று சான்றிதழ் வழங்கிய கம்பநாடன், தசரதன் என்றோ ஒருநாள் கைகேயிக்கு ஈந்த வரத்தினை அளித்து வாய்மையை நிலைநாட்டுவதற்காகத்தான் இராமன் காடு செல்ல நேர்ந்தது என்று காரணம் காட்டி, தசரதனுக்கு என்றென்றும் அழியாத புகழைத் தேடித்தருகின்றான். இப்படியாக வால்மீகி இராமாயணத்தில் தசரதன்பேரில் சுமத்தப்பட்ட குற்றங்களை, பழியுரைகளை அகற்றும் வகையில் சுமித்திரையை மறைமுகமான கருவியாகக் கையாண்ட நம் கவிச்சக்கரவர்த்தியானவர் இந்த உயரிய பெண்ணரத்தினத்தைப் பொறையின் இலக்கணமாக, தியாகத்தின் சிகரமாக, நுண்ணுணர்வின் கனவாக ஏற்றம் கொடுத்து இலங்கும்படியும் செய்கின்றான்.

அடுத்து, அயோத்தியே அழகுகுன்றி சோபை இழந்து திமிலோகப்படும் நிலையில் நாம் சுமித்திரையை நேருக்குநேர் சந்திக்கும் வாய்ப்பை அடைகிறோம். இதுவரை கம்பராமாயணம் எனும் காப்பிய ஆலயத்தில் நாம் அவளை ஓரிரு தடவைகளே காணும் தருணத்தைப் பெற்றிருந்தாலும் அவள் கோசலையின் நிழலாக, அவள் பின்னே மறைந்து தெரியும் சலனச் சித்திரமாகவே நமக்குத் தெரிகிறாள். கைகேயியின் கட்டளையை மன்னன் ஆணையாகச் சிரமேற்கொண்டு இராமன் கோசலையின் அரண்மனை சென்று அவளுக்குத் தேறுதல் கூறி விடை பெற்று வெளியே வரும் வேளையில் இலக்குவனது வில்லின் நாணொலி கேட்டு ஓடோடியும்வந்து, இலக்குவன் சீற்றத்தின் அவதாரமாகப் போருக்கு ஆயத்த மாகி நின்ற நிலையைக் கண்டு அவனைக் கண்டித்து, ''எந்நிலை வந்தாலும் பொறு மையை இழக்காத, கோபத்துக்குச் சற்றும் இடம் கொடாத இயல்பை உடைய வளான சுமித்திரையின் வயிற்றில் பிறந்த உனக்கு இச்சினம் எப்படி எங்கே தோன்றியது?'' என்று அவனது தாயின் அடக்கமான சுபாவத்தை எடுத்துக் காட்டி, (''விளையாத நிலத்து உனக்கு எங்ஙனம் விளைந்தது?'' என்றான்.) அவனை அமைதியடையச் செய்து அவனையும் அழைத்துக்கொண்டு சுமித்திரையின் அரண் மனைக்குச் செல்கிறான். இதற்குள் பட்டாபிஷேகம் நின்றுவிட்டதும் அதன்பின் நிகழ்ந்ததும் ஆகிய சகல சம்பவங்களையும் அறிந்து கொண்ட அந்த மாதரசி மைந்தர்கள் இருவரும் காடுசெல்லும் நோக்கத்துடன் வருகின்றனர் என்பதை அப்படியோ யூகித்துவிட்டாள். தன் மகனுடனே, மற்றவர்களுடனே ஒரு வார்த்தை கூடப்பேசாத அவ்வன்னை தன் புதல்வனது இயற்கையான பண்பினை, குணுதிசயங்களை நன்கு அறிந்திருந்தவளாகையால் அவளதும், இராமனதும் உள் ளத்தின் ஆழத்தில் எழுந்த எண்ணத்தினை உணர்ந்து புண்நிறைந்த நெஞ்சின ளாய்த் தரைமீது விழுந்து புரண்டாள். அவ்வேளையில் கைகேயியின் பணிப் பெண்கள் இராமனுக்காக அனுப்பிய மரவுரியைக் கொண்டுவர, இலக்குவன் தானே முன்சென்று அவற்றைக் கையில் வாங்கித் தன் தாயின் திருவடிகளில் தன் உளக்கிடக்கையை நுண்மதிபடைத்த அவள் உணர்ந்து கொள்ளும்படி விழுந்து வணங்கினான். அவனது மனக்குறிப்பை நன்கு ஊகித்தறிந்து கொண்ட சுமித்திரை இராமனது வாழ்க்கை இரகசியத்தினை உணர்த்தும் வரலாற்றுக் காப்பியமான ராமாயணத்தில் முதன்முதலாக வாய்திறந்து சொற்களை உதிர்க் கிறாள். அவள் வாய்மொழியாக இங்கு அமைந்திருப்பது இரண்டே இரண்டு பாடல்கள்தான். ஆனால், அவ்விரு கவிதைகளில் புதைந்திருக்கும் கருத்துக்களோ மிகமிக உயரியவை, வார்த்தைகளால் மட்டிட்டுக் கூறமுடியாதவை. ''இராமன் செல்லும் வனமே இனி உனக்கு அயோத்தி ஆகும். உன்மேல் அளவில்லா அன்பையுடைய இராமன் உனக்குத் தந்தையும் மன்னனுமாவான். பரதனுக்கு நாட்டை ஈந்துவிட்டு இராமன் காடு செல்கிறான் என்பதை அறிந்தும் உயிரை வைத்திருக்கும் நாங்கள் உனக்குத் தாயர் அல்லர். சீதையே தாயாவாள். இனி நீ காலதாமதம் செய்யாது உடனே புறப்படுவதே முறை'' என்ற கருத்துக் களைப் பின்வரும் பாடலில் காணலாம்.

> **''ஆகாதது அன்றால் உனக்கு அவ்வனம் இவ்வயோத்தி**
> **மாகாதல் இராமன் அம்மன்னவன் வையம் ஈந்தும்**
> **போகா உயிர்த்தாயர் நம்பூங்குழல் சீதை என்றே**
> **ஏகாய் இனி இவ்வயின் நிற்றலும் ஏதம்''**
>
> **என்றாள்.**

இதுவரை இராமனை இலக்குவன் தனது தமையன் எனக்கருதி வந்தான் என் பதை எண்ணிப் பார்த்த அம்மடவாள் இனிமேலும் இராமனைத் தமையன் என நினைத்தால் இலக்குவனை அவனிடம் சில உரிமைகளை, சலுகைகளை எதிர்பார்ப்

பான். ஆகவே, அவனை மன்னனாக மதித்து உரிமை பூண்டு சென்று அவனது கட்டளைகளை சிரமேற்கொண்டு இலக்குவன் வழுவின்றி நடப்பான் என்ற கருத்தினை வெளியிடும் சுமித்திரையின் பண்பட்ட உள்ளத்திண்மை இப்பாடலில் நன்கு பிரதிபலிப்பதைக் காண்கிறோம். அத்துடன் அவள் நிற்கவில்லை. அடுத்த பாடலில், 'மகனே, இவன் பின்னே செல்லும்போது தம்பி என்ற கருத்துடன் செல்லாதே. அடியானைப்போல் ஏவல் செய். இவன் அயோத்திக்கு மீள்வானாயின் அவன் பின்னே வா. அவ்வாறில்லையாயின் இவனுக்கு முன்பு நீ முடிந்திடு' என்ற கருத்தினை, ''பின்னும் பகர்வாள்: ''மகனே! இவன் பின்செல்; தம்பி என்னும் படியன்று; அடியாரினில் ஏவல் செய்தி; மன்னும் நகர்க்கே இவன் வந்திடில் வா; அது அன்றேல் முன்னம் முடி என்றனள் வான்விதி சோரநின்றாள்.'' முதல் பாடலில் மன்னன் என மதித்து இராமனுடன் செல் எனப் பணித்த அம்மாதரசி மன்னனுக்குத் தன் மக்களுக்குச் செய்யவேண்டிய கடமை உண்டு என்பது ஞாபகம் வரவே தன் கூற்றைச் சற்றே மாற்றி, ''தம்பி என்ற உறவுடன் அல்லாது அடியான் என்ற நிலையில் நீ பின்னே செல். ஆண்டானான இராமன் இட்ட பணியை, ஏவலையெல்லாம் குறையின்றி செய்து முடி'' என்று கூறிய அவள் ''அடிமையென்ற நிலையில் செல்லும் நீ உன் ஆண்டானாகிய இராமன் அயோத்திக்குத் திரும்பினால் அவன் பின்னால் வா. அப்படியில்லையாயின் அவனுக்கு முன்பாக நீ முடிந்துவிடு'' என்றும் பணிக்கின்றாள். தன் அன்பு மைந்தனைத் தமையனுக்காக இறக்கும்படி கட்டளை இடுகின்ற இவ்வன்னையின் தியாகத்தை, அன்பின் ஆழத்தை நாம் மெச்சாமல் இருக்க முடியாது. கணவன் இறக்கும் வேளையிலும்கூட அவனது வாய்மையைக் கடைப்பிடிப்பதற்காக அன்பு மைந்தனைத் தன் நைந்த மனதைக் கல்லாக்கிக்கொண்டு காட்டுக்கனுப்பிய கோசலையையும் தியாகத்தில் மிஞ்சிய சுமித்திரையும் தியாகமெனும் குன்றே. கம்பன் இச்சிறு வண்ணமிகு சிற்பத்தை — உணர்ச்சியையும் மதிநுட்பத்தையும் பூரணமாகப் பெற்றும் பொறையுடைமை என்ற தாரக மந்திரத்தால் அவற்றைக் கட்டியாளும் தகைமையும் சீர்மையும் பெற்ற மகோன்னதமான பண்புடைய விக்கிரகத்தை — தனது கவித்திறனை எல்லாம் திரட்டிப் படைப்பதன் — மூலம் சுமித்திரையை நம் உளங்களில் என்றென்றும் அழியாத உயிரோவியமாக, தியாகத்தின் பேரொளியாக நிலைத்து நிற்கும்படி செய்துவிட்டான்.

---

உன் எல்லா எண்ணங்களையும், செய்கைகளையும் கடவுள் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்பதை எப்பொழுதும் நினைவு கூர்வாயாயின் நீ தீமையான எண்ணங்களை மனதிற் கொள்ள மாட்டாய், தீமையான செயல்களைச் செய்யமாட்டாய்.

* * *

எதை நீ உண்டாலும், குடித்தாலும் முதலில் இறைவனுக்கு அர்ப்பணி.

* * *

தெய்வீக ஆற்றலுடன் ஒத்துழை. அமைதி, இசைவிணக்கத்தின் விருத்திக்காகப் பாடுபடு.

— சுவாமி சிவானந்தர்

# மனம் கோயிலாக........

திரு. சு. வேலுப்பிள்ளை

''மனக்குரங்கு''

''சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறமரிது'' — மனக்குரங்கு வாழ்க்கைக் காட்டிலே வளர்கின்ற விடய விருட்சங்களிலும் விட விருட்சங்களிலுமுள்ள பல்லாயிரம் பல்லாயிரம் கிளைகள் தோறும் தாவித்திரியாமல், 'சும்மா' இருக்குமானால், அந்தச் சும்மா இருக்கும் நிலை ஒரு சுகநிலை; மகா பெரிய நிலை.

ஆனால், தாவித்திரியும் இந்தக் 'குரங்கு' மனம் உள்ளவனே மனிதனும்! ஏனென்றால், 'மனம் உள்ளவன் மனிதன்'; 'மனம் அற்றன மாக்கள்.' ஆக, தாவித்திரியும் மனம் மனிதனின் தலையாய சிறப்பியல்பு. அது தாவித்திரியும் போதெல்லாம் எண்ணங்களையும் விளைவித்துக்கொண்டுபோகிறது. ஆகவே, மனம் ஒரு விளைநிலம்; மகா அதிசயமான விளைநிலம்.

அந்த விளைநிலத்தில் உழுது பண்படுத்தி விதை விதைத்து, நீர்பாய்ச்சி, குறித்தகாலம் வரும்வரை விளைவை எதிர்பார்த்திருக்கத் தேவையில்லை.

கணப்பொழுதைச் சதகோடி கூறிட்டுக் கண்ட மிக நுண்ணிய பின்னப் பொழுதிலேயே எண்ணங்கள் என்னும் நிறைவிளைவைத் தரக்கூடிய அதிசயமான விளைநிலம்.

எண்ணங்கள்தாம் நிறைவிளைவானால், அவை வாழ்க்கையின் மூலாதாரக் கனலா? அமுத சத்தியா?

அப்படித்தான் எண்ணத் தோன்றுகிறது.

எண்ணங்களே இயக்கமாய், செயலாய், வியத்தகு செயலாய், செயற்கருஞ் செயலாய், சாதனையாய் பலபல கோலங்கொண்டு கற்கால உலகினின்று இக் கால உலகைத் தோற்றுவித்தன; எதிர்கால உலகைத் தோற்றுவிப்பன. உலகை விண்வெளியுகத்திற்கு இட்டுச் சென்றிருப்பனவும் அவையே.

எண்ணங்களுக்குப் பேராற்றல் உண்டு; ஆனால், 'பெருந்தன்மை' உண்டோ என்றும் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

'மனநிலத்தின் நிறைவிளைவு எண்ணங்கள்' — இங்கு நிறைவிளைவு என்பது முழுமையான விளைவு என்னும் பொருளில் வந்த தொடரன்று; நிறைய உண்டாவது என்னும் பொருளில் வந்தது.

நிறைய உண்டாவதெல்லாம் நல்லதாய், என்றும் புதியதாய் வியக்கத் தக்கதாய் இருக்குமென்று சொல்லமுடியாது; பதராய்க் காற்றிற் பறப்பனவும் 'அரை வயிறனய்' வாழ்ந்து ஒதுங்கி விடுவனவும் உண்டன்றோ. நல்ல விதைகளோடு புல்லின் விதைகளும் கலப்பதுண்டன்றோ.

மனத்திலே கணந்தோறும் நிறைய நிறைய உண்டாகும் எண்ணங்கள் எல்லாம் நிலைகொள்வதில்லை. சில தோன்றிய கணமே பதராகிப் பறந்துவிடுகின்றன. சில 'அரை வயிறனய்' வாழ்ந்து ஒதுங்கி விடுகின்றன. சில புல்லின் விதைகளாய் நல்ல விதைகளோடு கலக்கின்றன.

புல்லின் விதைகளான புல்லிய எண்ணங்கள் புன் செயலுக்கு வழி நடத்து கின்றன. நல்ல விதைகளான நல்ல எண்ணங்கள் நற்செயலுக்கு வழி நடத்து கின்றன. அனைத்துலகையும் ஆளவேண்டும் என்னும் எண்ணம் — அதன் பெயர் அவா —; பிறரை அடக்கி ஒடுக்கும் எண்ணம் — அதன் பெயர் வெகுளி —; இவ் வெண்ணங்கள் இரண்டும் செயலாகி அணுவாயுதங்களை உருவாக்க வழி நடத்து மானால், இவை புல்லின் விதைகள்; புல்லிய எண்ணங்கள்.

ஈன்றாள் பசியைக் கண்ணாரக் கண்டு வைத்தும் அதைப்போக்க, பிறர் பொருளைத் தொட விரும்பாமையாகிய எண்ணம், மகத்தான சாதனையெதை யும் சாதிக்காவிடினும் அது நல்ல விதை; நல்ல எண்ணம்.

மனத்தில் விளையும் நல்லெண்ணங்களையும் தீய எண்ணங்களையும் இனங் காண வேண்டாமா? அதற்கு மனமே துணை நிற்கிறது. அந்த மனத்தின் கூறே மனச்சாட்சி; மனச்சான்று. அது மன எண்ணங்களின் தன்மையைத் துல்லிய மாக அளந்துகாட்டும் அதீத உணர்வுடையதோர் 'மீற்றர்'. நல்லெண்ணம் தோன்றும்போது ஒரு பக்கம் சாய்ந்து இதமளிக்கும்; தீய எண்ணம் தோன்றும் போது ஒரு பக்கம் சாய்ந்து முள்ளெனக் குத்தி வலியுண்டாக்கும்.

களவில் ஊறியவனும் லஞ்சத்திலே தோய்ந்தவனும் ஆயிரத்தோராவது முறை அச்செயலில் ஈடுபட்டாலும், அவர்களுக்கும் ஆயிரத்தோராவது முறை யாக மனச்சான்று குத்தி வலியுண்டாக்கும்.

மனச்சான்று மனிதருக்குத்தான் உண்டு; மிருகங்களுக்கு இல்லை.

சிருட்டியில் மனிதர்களில் மிருகங்கள் இல்லை; மனிதன் தன்னை மிருக மாக்கிக்கொள்ளும் செயற்கை உண்டு. மனச்சான்றின் குத்தலை அசட்டைசெய்து ஒருவன் மிருகமாய்ப்போனால் யார் என்ன செய்வது? அவனைத் திருத்த 'கிறி மினல்' சட்டங்களுக்கும் வலிமை போதாது.

ஒருவன் அழுக்காறுய எண்ணம் கொள்ளும்போது மனச்சான்று குத்தி வலியுண்டாக்கும்; 'சிவப்பு' காட்டி அபாயம் உணர்த்தும். இவ்வாறே அவா, வெகுளி ஆய எண்ணங்களும் இன்னச் சொல்லுக்காய எண்ணங்களும் கொள் ளும்போதும் மனச்சான்று 'சிவப்பு' காட்டும்.

இவை நாலும் பிரதானமான மன அழுக்குகளாம்; புல்லின் விதைகளாம்; இவை நாலும் நூலோர் கண்ட பலபல தீமைகளைப் பெற்றெடுக்கும் நற்றாயர். மனச்சான்று இனங்காட்டும் இந்நான்கையும் நீக்கிவிட்டால்; மனம் சுத்தமாகும்; அங்கே அறம் மலரும். "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்" அதனால் மனம் குரங்காகாது; கோயிலாகும்.

---

# என் கடன் பணி செய்து கிடப்பதே

பண்டிதர் க. சி. சுந்தரம்

"நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தெண்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே."

என்பது வாகீசப் பெருமானின் மணிவாக்கு. இன்றைய உலகின் இன்றியமையாத தேவை இத்தகைய உண்மைப் பணியாளர் பலரது அயரா உழைப்பே. போக நுகர்வினை முற்றத்துறந்து, பற்றற்ற உளத்தொடும், மன்னுயிரனைத்துந் தன்னுயிராக, இறைமைப் பண்புடனொன்றி நின்றாற்றும் அருட்பணியாளரே அகில சமாதானத்தை நிலைநிறுத்தும் அருந்தவப் புதல்வராவர். உலகமாதா பெற்றெடுத்த மக்கட் படைப்பில் இவ்வுன்னதப் பண்பில் இலைமறைகாயாக இலங்குகின்றனர். அருட்பணிபுரியும் கலைஞானச் செல்வரை யாக்கும் பணியில் இன்றைய கலாசாலைகளெதுவுமமையவில்லை. அது மட்டுமன்றிக் கவனஞ் செலுத்தவுமில்லை.

பண்டைய தமிழகம் இத்தகைய அருட் தொண்டர் பலரைப் பெருக்கித் தந்துள்ளதென்பது சரித்திரப் பிரசித்தம். போலி நாகரீக போகங்களிற்றிளைத்துக் கிடக்கும் இன்றைய நஞ் சமுகங்களிடையே மெய்யறிவாளரை, அருட்பணியாளரை எதிர்பார்ப்பது சோளப்பயிரில் நெற்கதிராராய்வதொக்கும். மெய்ப் பணியாளர்களையாக்கும் சக்தி தானமுந், தவமும், தர்மமும், ஜீவகாருண்யமும், விரதமுமாதிய தெய்வப் பண்புகளின் ஒன்றிப்பேயாகும். அரும்பெரும் ஞானிகளின் தோற்றத்தின் முக்கிய காரணம் இப்பெருஞ் சக்தியைப் பேணிக்காப்பதில் தலைநிற்றலே. இச்சக்தியின் வீறுகுன்றிய காலமே தமிழகம் அன்னிய ஆதிக்கத்தின்கீழ் அடிமையுற்றுத் தன்பண்பாடிழந்தொடுங்கி நிற்குங் காலமாகும்.

அடிமைப்பட்டல்லலுற்ற சமுதாயம் சுதந்திரதாகங்கொண்டு விடுதலை குறித்துப் போராடும் மனித சமூகத்தை ஆக்குமன்புப் பணியை உருவாக்கிய பெருமை இவ்விருபதாம் நூற்றாண்டிற்கேயுரியதாகும். ஆதிக்க வெறியினாக்கிரமிப்பினால் விடுதலைக் குரலின் முழக்கம் இறைவன் திருச்செவிகளில் ஒலிக்கும் காலமிது. ஆதிக்கவெறி காரணமாக அளப்பரும் சிறுநாடுகள் தஞ்சமூகப் பண்பாடும், பழமையும், பெருமையும், தலைமையும் சீர்குலைந்துள்ளன. அழிந்துபடும் இவற்றை ஆக்கியமைக்கத் துடிக்கும் மனித சமுதாயத்தின் இதயக்குமுறல் எண்ண அறிய எட்டா அறிவாளராம் அரும்பணியாளர்களை அவனிக்களித்தது. நம் ஒவ்வோரசைவும் உலகப் பணிக்குப் பெருவிளக்கந் தருவனவென்பதை உலகின் தலைவராய் விளங்கிய இறைமாட்சி மிக்க மகாத்மா காந்தியடிகள் வாழ்ந்து காட்டியுள்ளார். மேலும்பல எடுத்துக்காட்டுகள் தந்து காலவிரயம் செய்யாது அருட்பணியின் இன்றியமையாத் தேவையை உணர்ந்து செயலாற்றவேண்டுமென வேண்டுதும்.

கணப்பொழுதெல்லாஞ் சுழன்று சுழன்று நிலைமாறுமுலகின் பேரிடர் சுழல்களினின்றும் மக்கட்தொகுதியைக் கைதூக்கிக் காப்பதே அருட்பணியாளரது அன்புச்சேவையாகும். சுழித்தடித்தார்க்கும் உலக விவகாரங்களாம் அலைகளைத் தாண்டிச் சமூகமாங் கப்பலைக் கரைசேரவைப்பது மெய்த்தொண்டரின் அன்புப் பணியன்றி வேறொன்றாகாது. தன்னலவாஞ்சைமிக்க வலியார் அஃதிலாரை

யடக்கி ஒடுக்குவதே சூக்குமமாயமைந்துகிடக்குமுண்மை. இதன் கோரத்தாண்டவமே ஓயாப் போராட்டம். இதைப் புறங்காணவல்லது அகிம்சைப் பணியே. எனவே, அப்பணியின் உயர்வுதான் எத்தகையது.

சமூக உயிர்வாழ்வின் உரிமைப்பொருள்களாய மொழி, சமயம், கலை, பண்பாடு அனைத்தையும் சூறையாட முற்படும் பேய்க்காற்றனைய தன்னலவாஞ்சையின் நச்சுப்புயலிற் சிக்கிச் சுழலும் சமூகத்தை இந்நேரம் கைதூக்கிக் காப்பாற்றும் அன்புப்பணியாளராம் தொண்டர்குழாத்தின் தேவையையே இப் பேராபத்தினுட்படுத்தத் தவிக்கும் மனிதசமுதாயத்தின் இதயம் நாடித்துடிக்கின்றது. சுயநலப்பேயின் ஆசைநெறியினை அடக்கும் அன்புப்பணியே இன்று வேண்டப்படுவது.

''சமன்செய்து சீர்தூக்குங் கோல்போலமைந் தொருபாற் கோடாத'' சான்றோரே உலக சமாதான வாழ்வின் மூல புருடராவர். அக்கிரமம் ஒடுக்கப்படவேண்டுமேயாயின், அருட்தொண்டரின் உற்பத்தியும் மகாவலியாற்றின் மணலினும் பலவாய்ப்பெருகவேண்டும். பாண்டிநாட்டிற் சமணரது அநீதி தாங்காது மனந்துடித்த மானியாரின் புனித உணர்வு அல்லல்தீர்க்கும் அருந்தொண்டரை அளித்துதவியது. அக்கிரமம் தலைதூக்காதென்பதைத் திரிபுரதகனம், சூரசங்காரம் முதலியன எமக்கெடுத்துரைக்கின்றன. அக்கிரமத்தாலிடர்ப்படுவோன் தன் கடனும் பணியை மேற்கொள்ளவேண்டும். அன்றிச் சோம்பிக் கிடப்பின் இறையருள்தானும் எம்மைத் தாங்குமாறில்லை.

பசியாலழும் பிள்ளைக்குத் தாய் பாலினை ஊட்டியே தீருவாள். அஃதே போல் நம் கடமையை உணர்ந்து ஒன்றுபட்ட உள்ளத்தோடு பணிசெய்வோமாயின் இறையருளால் நற்பயனடைவது திண்ணம். ஆகவே, நாமனைவரும் ஒன்றியவுள்ளத்தோடும் கைதடி சைவ ஐக்கிய சங்கத்தின் வளர்ச்சி கருதி நிதியாகவோ, பொருள்களாகவோ தந்துதவுக்குவிக்குமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

இச்சைவச் சங்கத்துக்குச் செய்யும் பணி இறைவனுக்குச் செய்யும் பணிக்குச் சமன். இது எங்கடனுகும்.

நம்மனைவரது உயிருடனுமொன்றிய தமிழும், சைவமும் பணிசெய்து பேறடையுமாறும் என்றும் வளர்வதாக என்று வாழ்த்துதும்.

வாழ்க தமிழ்மொழி. வளர்க கைதடி சைவ ஐக்கியசங்கம்.

---

குரங்குபோல் மனங் கூத்தாடுகின்றதே. மனத்தை ஒருவன் அடக்கி வெற்றி கொள்ள முழுமனத்தோடு விரும்புவானுனல் சிவத்தியானத்தைத் தினந்தோறும் செய்துவரக் கடவன்.

— நற்சிந்தனை

## 1921-ம் ஆண்டு முதல் பணியாற்றிய தலைவர்களினதும் காரியதரிசிகளினதும் பட்டியல்

**தலைவர்**

| | |
|---|---|
| 1921—1925 மே | முதலியார் ம. முத்துக்குமாரசுவாமி |
| 1925 மே—1938 | திரு. நா. மாணுர் |
| 1939 | திரு. ச. சுப்பிரமணியம் |
| 1940—43 | திரு. நா. மாணுர் |
| 44—45 | திரு. ச. சுப்பிரமணியம் |
| 46 | திரு. சி. வேலாயுதர் |
| 47 | திரு. நா. இராமலிங்கம் |
| 48 | திரு. சி. வேலாயுதர் |
| 49 | திரு. ச. சுப்பிரமணியம் |
| 50—54 | திரு. அ. இளையதம்பி |
| 54—55 | திரு. கா. மாணிக்கம் |
| 55—56 | திரு. அ. இளையதம்பி |
| 56—59 | திரு. அ. சின்னையா |
| 59—60 | திரு. செ. முத்துக்குமாரசுவாமி |
| 60—72 | திரு. அ. சின்னையா |

**காரியதரிசி**

| | |
|---|---|
| 1921—1928 | திரு. வீ. கணபதிப்பிள்ளை |
| 29—30 | திரு. சி. பொன்னப்பா |
| 33—36 | திரு. சோ. சடாட்சரம் |
| 36—37 | திரு. மா. சந்திரசேகரர் |
| 38 | திரு. சு. சின்னத்தம்பி<br>திரு. பூ. இலங்கையர் |
| 39 | திரு. ஆ. கந்தையா |
| 40 | திரு. சி. வேலாயுதர் |
| 41—43 | திரு. த. மயில்வாகனம் |
| 44—45 | திரு. சி. இராசதுரை |
| 46—47 | திரு. கா. ஆறுமுகம் |
| 48—49 | திரு. சோ. சடாட்சரம் |
| 50—51 | திரு. மா. சந்திரசேகரம் |
| 52—53 | திரு. சு. வேலாயுதர் |
| 53—54 | திரு. அ. சின்னையா |
| 54—59 | திரு. செ. முத்துக்குமாரசுவாமி |
| 59—61 | திரு. அ. சிவராமலிங்கம் |
| 61—63 | திரு. சு. கனகசபாபதி |
| 63—67 | திரு. வே. கதிர்காமு |
| 67—68 | திரு. சி. சு. சின்னத்தம்பி |
| 68—69 | திரு. வ. சுப்பையா |
| 69—71 | திரு. க. நடராசா |
| 71—72 | திரு. சு. இந்திரராசா |
| | திரு. வே. கதிர்காமு |

## நன்றி மறப்பது நன்றன்று

எமது சங்க விழாக்களில் கலந்து விழாவைச் சிறப்பித்த கைதடி வாசிகளல்லாத பெரியோர்களுக்கு எமது நன்றி. எம்மால் இயன்றவரையிற் பெயர்களைத் திரட்டியுள்ளோம். சில பெயர்கள் எமக்குக் கிட்டாமையினுல் அச்சிற் பதிக்க முடியாமைக்கு மிக வருந்துகின்ருேம். எம்மை மன்னிக்க.

உயர்திரு. மகாவேதசுவாமிகள்
உயர்திரு. வடிவேற்சுவாமி
பிரம்மஸ்ரீ C. S. S. மணி ஐயர்
பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணிய ஐயர்
புலவர் த. குமாரசுவாமிப்பிள்ளை
திரு. தம்பிமுத்து பாகவதர்
திரு. வி. கிருஷ்ணர்
திரு. மு மயில்வாகனம்
செந்தமிழ் திரு. செ. சின்னத்தம்பி
டாக்டர் C. குருசாமி

திரு. கா. கி. நடராசன்
திரு. R. N. சிவப்பிரகாசம்
திரு. ச. அம்பிகைபாகன்
திரு. K. S. ஆனந்தர்
திரு. செ. முருகேசு
பண்டிதர் கந்தையா
திரு. V. நல்லையா
திரு. விஞசித்தம்பி
இசைவல்லார் S. செல்வத்துரை

## கைதடி சைவ ஐக்கிய சங்கம்
### கொழும்புக் கிளை

சங்கத்தில் அன்பும் ஆர்வமும் கொண்ட அங்கத்தவர்கள் பலர் உத்தியோகங் காரணமாகக் கொழும்பில் வசிக்க வேண்டியிருந்தது. அவர்கள் சங்கத்திற்குத் தம் கடமையைச் சரிவர ஆற்றுவதற்குக் கொழும்புக் கிளை அவசியமென்பதை உணர்ந்து 1927 ஆம் ஆண்டு யூலாய் மாதம் இக்கிளை நிறுவப்பட்டது. இக்கிளை அவ்வப்போது சங்கத்திற்குத் தேவையான பணத்தைத் திரட்டுவதிலும் ஆலோசனைகள் கூறுவதிலும் பேருதவியாகவிருந்தது. பல ஆண்டுகள் சமயம், தமிழ் மொழி சம்பந்தமான கருத்தரங்குகள் நடாத்தி அங்கத்தவர்களிடை அறிவை வளர்த்து வந்தது. பாராட்டிற்குரிய பல பணிகளாற்றிய இக்கிளை இன்று செயலாற்ற முடியாதிருப்பது வருந்தத் தக்கது. எனினும், தேவைக்கேற்ப எமது சங்க உப சபைகள் அங்கு இயங்கி வருதல் மிகவும் பாராட்டற்குரியது. இக்கிளையை நடாத்துவதில் பங்குபற்றியோர்களுக்கு எமது நன்றி உரியது.

---

## எமது நன்றி

பொன்விழா மலர் சிறப்புற வெளிவருவதற்கு ஆசியுரைகள், வாழ்த்துரைகள், வாழ்த்துப் பாக்கள், கட்டுரைகள் உதவிய பெரியார்களுக்கும், விளம்பரங்கள் தந்துதவிய வள்ளல்களுக்கும், ஸ்ரீ சண்முகநாத அச்சகத்தாருக்கும், படப்பிடிப்பாளருக்கும், புளோக் செய்தோருக்கும் எமது நன்றி உரியது.


சங்கம் வைத்து மொழி வளர்த்த நம் முன்னோர்கள் பரம்பரையில்
கடந்த 50 ஆண்டுகளாகச் சைவத்திற்கும் தமிழிற்கும்
ஈடுஇணையற்ற சேவை செய்து
**பொன்விழா கொண்டாடும்**
**கைதடி. சைவ ஐக்கிய சங்கத்தை**
நாம் மனமார வாழ்த்துகிறோம்.

# ஸ்ரீ கிருஸ்ணு என்ரர்பிரைஸ்

**கைதடி.**

**மோட்டார், டிருக்ரர், வாட்டர் பம்ப் உப உறுப்புகள், உஷா தையல் மிசின், மின் விசிறிகள், எலெக்ட்றிக்கல் இரும்புச் சாமான்கள்**
விற்பனையாளர்கள்.

அன்பளிப்பு

V

தென்மராட்சி மேற்கு

# பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

கைதடி.

ஓம்

எல்லாரும் இன்புற் றிருக்கவென் றெண்ணுவதே
அல்லால்மற் றொன்றும் அறியேன் பராபரமே. — தாயுமானவர்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், விற்பனையாளர்கள், பாவிப்பாளர்கள்
அனைவருக்கும் எமது உளம் கனிந்த

நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

★

நாடு நலம்பெற, நாம் நற்சேவை செய்ய
எமது உற்பத்திப் பொருள்களை வாங்கி உபயோகியுங்கள்.

வணக்கம்.

அதிபர்,

**மில்க்வைற் சோப் தொழிற்சாலை**

தபாற் பெட்டி இல. 77, — யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233 தந்தி: "மில்க்வைற்"

கிளை: 79, மெசன்ஜர் வீதி, கொழும்பு - 12.

தொலைபேசி: 36063

அன்றாட
வீட்டு உபயோகத்திற்கான
பொருள்களும்
**விவசாயப் பசளைகளும்**
பெறுமிடம்

**ஆறுமுகம் மாளிகை**

பிள்ளையார் கோவிலடி,

கைதடி.

எல்லாவிதமான சைக்கிள்கள்
ரோச் லைட் (Torch light)
பெற்றோ மாக்ஸ் (Petro max)
ஆகியன
**துப்பரவாகவும் குறைந்த சலாரிலும்
திருத்திக் கொடுக்கப்படும்.**
மேற்படி வேலைக்காகிய
உதிரிப்பாகங்களும்
மின்சார வேலைக்காகிய
உபகரணங்களும்
இங்கே மலிவாகக் கிடைக்கும்.

பரிசோதித்துப் பார்க்கவும்:

**கிருஷ்ண
சைக்கிள் ஸ்ரோஸ்**

நெஞ்சிருக்கும்வரை நினைவு இருக்கவேண்டிய இடம்!

**லீலாவதி ஸ்டோர்ஸ்**

(அதிபர்: க. தம்பிப்பிள்ளை அவர்கள்)

**கைதடி**

**ஞாபகம் இருக்கட்டும்!**

கைதடி மக்களின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்து
மக்களின் இதயங்களைக் கொள்ளைகொண்டுள்ள
**உன்னத ஸ்தாபனம்.**

மக்களின் மனதில்
என்றும் நீங்கா இடம்பெறும்!

**ஆரிய பவான்**

கைதடிச் சந்தி,

**கைதடி.**

ருசிமிக்க சிற்றுண்டி தேனீர்
வகைகளுக்கு
விஜயம் செய்யுங்கள்.

வணக்கம்.

உரிமையாளர்:
பொ. இராமசாமி

எமது ஸ்தாபனத்தில்
நிதானமான விலையில்
உங்களுக்குத் தேவையான
பாவனைப் பொருட்களும் மற்றும்
பலசரக்கு, திறம் புகையிலை,
விநோதமான உடைகளும்
கலியாண வைபவங்களுக்குத்
தேவையான பிடவைகள்
திறம் சேட், சாரங்கள் முதலியன
மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**கிருஸ்ணு ஸ்டோர்ஸ்**

கைதடிச் சந்தி,

**கைதடி.**

# ஸ்ரீ முருகன் மரத் தொழிற்சாலை

கைதடி

★ யந்திர மூலம் மரம் அரிதல்

★ தளபாடங்கள் செய்தல்

★ சகல கட்டட மரவேலைகள் யாவும்

ஓடர்களுக்குக் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

SPACE DONATED

BY

V

**Colombo Distributors**

DEALERS IN TEXTILES

59, Power House Road,

**JAFFNA.**

போன்: **506** தந்தி: **வணக்கம்**

## செ. காசிப்பிள்ளை அன் கோ.,

82, கே. கே. எஸ். ரோட்,

கிளை: 74/8, பெரியகடை,

யாழ்ப்பாணம்.

கோவில் பட்டுக் குடைகள்

சகலவிதமான

பட்டு, பருத்திப் புடவைகளும்

ரெடிமேட் ரகங்கள்

இராமகிருஷ்ண நெசவு நிலையத்தில்

உற்பத்தி செய்யும்

புடவை வகைகளும்

நிதானமான விலையில்

பெறுமிடம்.

பொன்விழாவுக்கு எமது வாழ்த்துக்கள்

மீன் பாடும் தேன் நாடாம் மட்டுமாநகர் மக்களின் தேவைகளை
உடனுக்குடன் பூர்த்திசெய்து, அனைவரதும் மனதில்
என்றும் நீங்கா நினைவாக விளங்கிவரும்

# கணேசன் ஸ்டோர்ஸ்

(அதிபர்: இ. செ. கணேசன்)
13, மத்திய வீதி,
மட்டக்களப்பு.

கைதடி சிவசக்தி அழைக்கின்றது!

எம்மிடம்

பாடசாலை உபகரணங்கள், புதினப் பத்திரிகைகள், சாய்ப்புச் சாமான்கள், பரிசளிப்புப் பொருட்கள், பெண்களுக்கேற்ற அழகுசாதனப் பொருட்கள் என்பன எப்போதும் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன்

சுகாதாரவிதிப்படி தயாரிக்கும் நல்லெண்ணெய்
குளிரூட்டப்பெற்ற குளிர்பானங்களும் கிடைக்கும்.

கல்விப் பகுதி (அரசாங்க) திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்ற
பாடசாலைப் புத்தக வியாபாரிகள்.

# சிவசக்தி ஸ்டோர்ஸ்

(அதிபர்: ஆ. கந்தையா)
கைதடிச் சந்தி,
கைதடி.

நல்வாழ்த்துக்கள்


පිරිසිදු
කයිතඩි
சுத்தமான
கைதடி
SUMATHY BRAND
KAITHADY
මිරිස් කුඩු
மிளகாய்த்தூள்
PURE KAITHADY CHILLIE POWDER
MANUFACTURERS:—
KAITHADY GRINDING MILLS
KANDY RD., KAITHADY.
THARAN

*Space Donated By*

# RAJGOPALS

[LEADING TEXTILES IN THE NORTH]

36/1, GRAND BAZAAR, — JAFFNA.

DIAL : 7168